# கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2026 (யுவ ஆண்டு) புரட்டாசித் திங்கள்



முதலாம் இராசேந்திரன் அமைத்து வாழ்ந்த அரண்மனையின்
அடித்தளத் தோற்றம். கி.பி. 11-ஆம் நூற்றாண்டு,
(மாளிகைமேடு) கங்கைகொண்ட சோழபுரம்

கா[illegible]ண்டிதழ் - 44 (1995, அக்டோபர் திங்கள்) விலை ரூ. 1-5
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே......


பக்கம்

1. இராசேந்திரன் காலக் கட்டடக் கலை

— நடன. காசிநாதன் ... 1

2. வரலாற்றுக்கு முற்பட்ட
நாகை காயிதே மில்லத் மாவட்டம்

— கே. எஸ். சம்பத் ... 10

3. தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியின் தோற்றம்

— டாக்டர் ஆ. பத்மாவதி ... 17

4. நாகையும் பௌத்தமும்

— தே. கோபாலன் ... 25

5. குலோத்துங்கன் காலத்தில்
பிச்சை எடுத்துக்கட்டிய கோயிலும்
அதன் கல்வெட்டுக்களும்

— புலவர் செ. போசு ... 36

# இராசேந்திரன் காலக் கட்டடக் கலை

**நடன. காசிநாதன்**
**இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை**

மண்ணாலும், மரத்தாலும், சுதையாலும் சங்ககாலத்தில் வளர்ந்தோங்கிய கட்டடக்கலை பல்லவர், பாண்டியர் காலத்தில் அயல் பகுதியினரின் தொடர்பால் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய கல்லால் உருவாகத் தொடங்கிற்று. அவ்வாறு தொடங்கப் பெற்ற கற்கட்டடக் கலை இடைக்காலச் சோழர் காலத்தில் ஏற்றம் பெற்று ஓர் உன்னத நிலையில் (Supreme Stage) உயர்ந்தோங்கி மிளிர்ந்தது என்று கூறினால் தவறில்லை.

ஒற்றைக் கற்றளியைத் தொடர்வதா, குடைவரைக் கோயிலைத் தொடர்வதா அல்லது கற்களடுக்கி எழுப்பும் கல்லயைத் தொடர் வதா என்றிருந்த பல்லவர் காலத் தொடக்க நிலை. பிற்காலப் பல்லவர் காலத்திலேயே கற்களடுக்கி எழுப்பும் கட்டடக்கலைதான் தமிழகத்தைப் பொறுத்தவரை நிலைத்து நிற்கக் கூடியது என்ற நிலை பெற்று வளர்ச்சி பெற்றது. அக்கலை மாமன்னன் இராச ராசன் காலத்தில் உச்சநிலையை எய்தியது என்று கூறுவது சாலப் பொருத்தமாகும். தென்மேருவென்று போற்றப்படும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் இமயமலையைப் போன்று உயர்ந்தோங்கி நிற்கும் எழில்மிகு கட்டடமாகும். இறைவன் உறையும் கயிலாய மலையின் உயர்ந்த தோற்றத்தைக் கோயிலுக்குத் தந்தான் மாமன்னன் இராசராசன்.[1] அவனின் அருமை மைந்தனான இராசேந்திரனோ இறைவனின் அருவுருவ நிலையான தாணுவையே கோயிலாக்கி மகிழலானான். தாணுவின் வடிவில் அமையப் பெற்றதுதான் கங்கைகொண்டசோழீச்சுரம்.

அடித்தள முதல் சிகரம் முடிய சதுர வடிவில் மேலே போகப் போகக் குறுகி உயர்ந்து நிற்கும் தஞ்சை இராசராசேச்சுரம் கதிரவ னின் ஒளிக்கற்றை அதன் மீது படப்படப் பொன்மயமான மேருமலை யாகவே காட்சி தரும். ஆனால் கங்கைகொண்ட சோழீச்சுரமோ சிவபெருமானின் அருவுருவ நிலையான இலிங்க வடிவமான சதுரம்,

எண்பட்டை, வட்டம் என்ற வடிவங்களை விமானத்தில் தாங்கி பிரமன், மால், சிவன் என்னும் மும்மூர்த்திகளின் ஐக்கியம் தான் ஈச்சுரன் என்ற தத்துவக் கோட்பாட்டை வெளிப்படுத்தும் கலைப் படைப்பாகக் காட்சி தருகிறது. இது மட்டுமல்லாமல் விமானங்களின் நாகரம், திராவிடம், வேசரம் என்ற மூன்று அமைப்பையும் ஒருங்கே இக்கோயிலில் அமைத்து உலகுக்கே ஒரு புதிய பாணியையும் தந்துவிட்டான் மாமன்னன் என்றும் கூறலாம். விமானத்தின் அடித்தளம் நாகரவடிவிலும், நடுப்பகுதி திராவிட வடிவிலும் உச்சிப்பகுதி வேசரவடிவிலும் காணப்படுவது முத்தொழில் புரியும் மூவரின் கூட்டு உருவம் தான் சிவன் என்பது போல மூன்று வகையான அமைப்புக்களின் கூட்டு வடிவம் கங்கை கொண்டசோழீச்சுரம் என்று உணரும் வண்ணம் அமைக்கப் பெற்றது என்று கூறினால் மிகையாகாது

இராசராச ஈச்சுரத்துக்கும் கங்கைகொண்ட சோழீச்சுரத்துக்கும் அடிப்படையில் சில வேறுபாடுகளைக் காண முடியும்.

## சில வேற்றுமைகள்

1. உண்ணாழியில் கிழக்குப்பக்கம் மட்டுமே வாயில் உள்ளது கங்கைகொண்டசோழீச்சுரர் கோயிலில். ஆனால் தஞ்சை இராசராசேச்சுரத்து உண்ணாழியில் கிழக்குப்பக்க வாயிலாக உண்ணாழிச் சுவருக்கு அடுத்துள்ள சுவரான பஹிர்பித்தியில் (வெளிச்சுவர்) உண்ணாழியின் மூன்று பக்கங்களிலும் வாயில்கள் உள்ளன. உண்ணாழியின் நான்கு பக்கமும் வாயில் உள்ள அமைப்பு 'சர்வதோ பத்தர' என்று அழைக்கப்படுகிறது. மற்ற மூன்று வாயில்களுக்கும் எதிராக உண்ணாழி உட்சுவரின் (அந்தர் பித்தி) கிழக்குப் பக்கம் சிவன் ருத்திரராகவும், மேற்குப்பக்கம் சிவன் சந்தியாநிருத்த மூர்த்தியாகவும், தெற்குப்பக்கம் தேவி மனோன்மணியாகவும் சிற்பங்கள் காணப்படுகின்றன.

2. உண்ணாழியின் உட்சுவரில் ஓவியம் இல்லை.

3. முதல் தளத்தின் உட்சுவரில் சிவன் ஆடவல்லானாக அபிநயித்து ஆடும் சிற்பங்கள் காணப்பெறவில்லை.

4. விமானத்தின் உயரம் இராசராசேச்சுர விமானம் உயரத்திற்கு முக்கால் அளவு.

5. இரு பிரஹாரமும் இரு கோயில்களும் இல்லாமல் ஒரு கோயிலும் ஒரு பிரகாரமும் காணப்படுகின்றன.
6. கங்கைகொண்ட சோழீச்சுரத்தில் 'பன்னிரு ஆதித்தயர்' சிற்பங்கள் கிடைத்திருப்பது.
7. கங்கைகொண்ட சோழீச்சுரர் விமானத்தின் வெளித்தோற்றம் இலிங்க வடிவில் உள்ளது.
8. இராசராசேச்சுரம் விமானத்தின் உட்தோற்றம் சதுர வடிவில் மேலே போகப் போகக் குறைந்து (Pyramidal) காணப்படுவது.
9. கங்கைகொண்ட சோழீச்சுரர் கோயிலில் கல்வெட்டுக்கள் குறைவாக உள்ளன. குறிப்பாக யாரால் இக்கோயிலை அமைக்கப்பட்டது என்ற செய்தி தரும் கல்வெட்டு இல்லாமை.

**சில ஒற்றுமைகள்**

1. உண்ணாழிச் சுவரையடுத்து (அந்தர்பித்தி) புறச்சுவர் (பஹிர் பித்தி) உள்ளது.
2. 100 அடி சதுரத்தில் விமானத்தில் அடித்தளம் அமைந்திருப்பது.
3. உபபீடம் காணப்பெறுவது.
4. மஹாமண்டத்தின் மேல் ஒரு தளம் பெற்றிருப்பது,
5. திருச்சுற்று மாளிகையில் மேல் தளம் பெற்றிருப்பது.
6. புராணக்கதைகள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளமை.

மேலும், தஞ்சைக் கோயில் விமானம் சிவபெருமானின் 'சதாசிவ' வடிவைக் குறிப்பதாகவும் கருதப்படுகிறது. அதாவது சிகரமும் தூபியும் ஈசான சிவத்தையும், விமானத்தின் நான்கு பக்கங்களும் (குறிப்பாகக் கீழ் மூன்று தளங்களும்) தத்புருஷர், அகோரம், சத்யோஜதம், வாமனம் ஆகிய நான்கு வடிவங்களாகவும் கொள்ளப் படுகிறது.[2] ஆனால் கங்கை கொண்ட சோழீச்சுரர் கோயில் விமானம் சிவபெருமானின் இலிங்க வடிவத்தின் தத்துவத்தை விளக்குவதாக மட்டுமே தோற்றம் தருகிறது. இலிங்க உருவின் தத்துவத்தை விளக்கும் மகுடாகமம் என்றும் நூல் ஒன்பது வகையான தெய்வங்களையும் அவைகளுக்குரிய தத்துவங்களையும் (நவதத்துவம்) உள்ளடக்கியது இலிங்கம் என்று குறிப்பிடுகிறது.

அவையாவன பிரமன், திருமால், ருத்ரன், மகேசன், சதாசிவன், பரபித்து, பரநாதன், பராசக்தி மற்றும் பரசிவன் என்று கீழிருந்து மேலாகக் கருத வேண்டும். மேற்காணும் ஒன்பது வகைத் தத்துவங்களும், ஆடவல்லான் பரமானந்தத் தாண்வடத்தில் ஜோதிஸ்வருபமாக ஐக்கியமாகி விடுகின்றன என்று கொள்ளப்படுகிறது.[3] கங்கைகொண்டசோழீச்சுரர் கோயில் உண்ணாழியின் தென்புறச் சுவர் மாடத்தில் ஆடவல்லான் அமைக்கப் பெற்றிருப்பது அத் தத்துவத்தின் அடிப்படையில்தானோ என்று நாம் எண்ண வேண்டியுள்ளது.

இதுவரை இராசேந்திரசோழன் காலத்துக் கட்டடக்கலையில், சமயம் சார்ந்த கட்டட வகைக்கு ஓர் உதாரணமாகக் கங்கை கொண்ட சோழீச்சரர் கோயில் விவரிக்கப்பட்டது. இனி அவன் காலத்தில் மையம் சாராத கட்டடக்கலைக்கு அவனால் எழுப்பப் பெற்ற அரண்மனையைப் பற்றியும், சோழகங்கம் மதகு பற்றியும் மற்றும் சிறுவாய்க்கால், கோட்டைச்சுவர் ஆகியவற்றின் அமைப்புப் பற்றியும் காண்போம்.

கங்கைகொண்டசோபுரம் மாளிகைமேட்டை ஆய்வு செய்ய 1980-ல் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை அகழாய்வாளர்களை அனுப்பியது.[4] அவ்வாய்வின் அடிப்படையில் அதே ஆண்டிலும் மற்றும் 1984-ஆம் ஆண்டிலும் டாக்டர். நாகசாமி அவர்களின் வழிகாட்டுதலோடு அகழாய்வு நடத்தப்பெற்றது. இராசேந்திர சோழனின் மாளிகை வெளிப்படுத்தப்பட்டது. இக் கட்டுரையாசிரியர் வழிகாட்டுதலின்படி மீண்டும் 1991-ல் அகழாய்வு இங்கு தொடரப்பட்டது. அப்போது மேலும் சில கட்டடப்பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

மூன்று காலத்தைச் சார்ந்த கட்டடப்பகுதிகள் இங்கு இருக்கின்றன என்பது 1991ல் நிகழ்த்தப்பெற்ற அகழாய்வு மூலம் தெரிய வந்தது.[5] இராசேந்திரசோழன் காலத்துக்கு முன்பிருந்த கட்டடப்பகுதி, இராசேந்திரன் காலத்திய கட்டடப்பகுதி, அவனுக்குப் பின்பு ஏற்பட்ட கட்டடப்பகுதி ஆகியவை அவையாகும்.

இராசேந்திர சோழன் காலத்துக்கு முன்னதாகக் கருதப்படும் கட்டடப்பகுதியின் முழுப்பகுதியும் நமக்குத் தெரியவில்லை. சிறு பகுதிதான் நமக்குத் தெரிய வந்துள்ளது. ஆதலால் அக்கட்டடத்தின் அமைப்பு எவ்வாறு இருந்தது எனக் கூற இயலாது ஆனால் இராசேந்திர சோழன் காலத்துக் கட்டடப் பகுதியில் பெரும் பகுதி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறு வெளிப்படுத்தப் பட்டிருக்கின்ற பகுதியை வைத்துப் பார்க்கையில் ஒன்றன் பக்கத்தில் ஒன்றாக இரு சுவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் எழுப்பப் பட்டு இருப்பது தெரிய வருகிறது. இந்த இரு சுவர்களுக்கும் இடையில் 55 செ.மீ அளவில் இடைவெளி விடப்பட்டு இருக்கிறது. இவ்விடைவெளி ஆற்றுமணலால் நிரப்பப்பட்டுக் காட்சி தருகிறது. ஒவ்வொரு சுவரின் அகலமும் 1.10 மீட்டர் உடையது. இச்சுவர்கள் தரைப்பகுதியில் இருந்து 1.65 மீட்டர் ஆழத்தில் கிடைத்துள்ளன. தற்பொழுது கையாளப்பட்டு வரும் முறையான குறுக்காகவும், நெடுக்காகவும் (Header and Stretcher) கற்கள் அடுக்கும் முறையே அக்கட்டடத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது அறியமுடிகிறது. ஒரு கல் வரிசைக்கும் மற்றொரு கல் வரிசைக்கும் இடையில் பிடிப்பு சாந்தாகக் களிமண்ணும் பனைவெல்ல நீரும் கலந்து தயாரிக்கப் பட்ட சாந்து பயன்படுத்தப்பட்டிருக்கலாம் போன்று தெரிகிறது. இச்சுவர்களின் மேல் பகுதியில் சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டிருக் கிறது. அச்சாந்தின் கனம் 4 செ.மீட்டர் ஆகும். ஒவ்வொரு சுவரும் மொத்தம் 37 செங்கல் வரிசைகளை உடையதாகக் காணப் படுகிறது. கீழ்மட்டத்தில் இருந்து ஒரு நிலை வரை 23 வரிசைகளும் அதற்கு மேல் 14 வரிசைகளும் காணப்படுகின்றன. மேல் இருந்து 15வது வரிசையினுடைய அகலம் பக்கத்துக்கு 9 செ.மீ. அதிகமாகக் காணப்படுகிறது. ஆதலால் 15-வது வரிசையில் இருந்து சுவரின் மொத்த அகலம் 1.28 செ.மீ. ஆகத் தெரிகிறது. ஒவ்வொரு செங்கல்லும் 24·5x12·5x0·6 செ.மீ. அளவில் உயரம், அகலம், கனம் ஆகியவற்றைப் பெற்றிருக்கிறது. ஒவ்வொரு சுவரிலும் 2 மீட்டர் இடைவெளி விட்டு சதுர வடிவில் கருங்கல் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு அமைக்கப்பெற்ற கற்கள் இதுவரை 32 கருங்கற்கள் கிடைத் துள்ளன. இக்கருங்கற்களின் நடுவில் வட்ட வடிவில் குழி உள்ளது. இவற்றைப் பார்க்கையில் இக்கருங்கற்கள் தூண்களைத் தாங்கும் பீடங்களாக இருந்திருக்கலாம் என்று தெரிகிறது. ஒவ்வொரு கருங்கல்லும் 6?x60x30 செ மீ. அளவில் உள்ளது. ஒன்றையடுத்து

ஒன்றாகச் செல்லும் இரு சுவர்கள் மற்றும் இக்கருங்கற்களையும் பார்க்கையில் இராசேந்திர சோழன் எழுப்பிய இக்கட்டிடம் மேல்தளம் பெற்று விளங்கியிருக்கலாம் என்று உணர முடிகிறது. கட்டடத்தின் உள்பகுதி தூண்கள் நிரம்பிய பகுதியாக இருந்திருக்கலாம் என்று தெரிகிறது.

ஒன்றையடுத்து ஒன்றாக இரு சுவர்கள் அமைக்கப்பட்டதன் காரணம், இரு சுவர்களுக்கும் இடையில் காணப்படும் ஆற்று மணலைக் கொண்டு பார்த்தால், ஒரு வேளை கட்டடம் குளிர்ச்சியுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், தளங்களையுடைய பகுதியாக மேல் பகுதி இருந்ததால் அதைத் தாங்கக்கூடிய வகையில் வலுவான அடித்தளச் சுவர்கள் வேண்டும் என்ற நோக்கத்திலும் அமைத்திருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. இராசேந்திர சோழன் காலத்தில் எழுப்பப்பட்ட கங்கை கொண்ட சோழீச்சுரம் ஆலயத்தின் உண்ணாழிப் பகுதியில் இரு சுவர்கள் ஒன்றையடுத்து ஒன்றாக எழுப்பப் பெற்று ஒரு நிலை வரை தனித்துச் சென்று பின்னர் ஒன்றாகச் சேருகின்றன. அதன் மீது விமானப் பகுதி அமைக்கப்பட்டிருக்கிறது. மேலே தளங்களை உடைய கனமான மேல் பகுதியைத் தாங்குவதற்காக இரு சுவர்கள் அமைக்கப்பட்டிருக்கிறது என்று கருத முடிகிறது. மாமன்னன் இராசராசன் எழுப்பிய தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் இரு சுவர் முறையைப் பயன்படுத்தி இருப்பது உணரற்பாலது. இராசேந்திர சோழன் காலத்தியக் கட்டடத்தில் ஒரு பகுதியில் சுவர்களில் பெருக்கல் குறி போடப்பட்டுக் காணப்படுகிறது. இக்குறிகள் பெரும்பாலும் சுவர் எழுப்பிய கொத்தனார்களால் போடப்பட்டிருக்கலாம் என்று கருத முடிகிறது ஒரு குறிப்பிட்ட அளவைக் குறித்துக் கொள்வதற்காக இத்தகைய குறியீடுகள் இடப்பட்டிருக்கலாம் என்று உணர முடிகிறது.

இராசேந்திர சோழன் காலத்திற்குப் பிறகு எழுப்பப்பட்ட கட்டடம் ஒன்றும் அகழாய்வில் தெரிய வந்துள்ளது.[6] இக்கட்டடப் பகுதி தரைப்பகுசியில் இருந்து சுமார் $1\frac{1}{2}$ அடி ஆழத்திலும், இராசேந்திர சோழன் காலத்துக் கட்டடப் பகுதியில் இருந்து சுமார் 1 அடிக்கு மேலேயும் காணப்படுகிறது. இதிலிருந்து இக்கட்டடம் இராசேந்திர சோழன் காலத்திற்குப் பிற்பட்டதாகவும், சுமார் கி. பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் அமைக்கப்பட்டிருக்கலாம் என்றும்

ஊகிக்க முடிகிறது. இராசேந்திரன் காலக் கட்டடப் பகுதியை வெளிப்படுத்திய போது இங்கு சில வண்ணம் பூசப்பட்ட காரைகள் கிடைத்துள்ளன. காரைகளில் பச்சை, மஞ்சள், சிவப்பு நிறம் ஆகிய வைகளால் வண்ணங்கள் தீட்டப்பட்டிருப்பது தெரிய வந்தது. இவற்றைக் கொண்டு பார்க்கையில் இராசேந்திரனது மாளிகைச் சுவர்களின் உட்புறத்திலும், வெளிப்புறத்திலும் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டு அழகு மாளிகையாக அது விளங்கியிருக்கலாம் என்று அறிய முடிகிறது. இக்கட்டடத்தில் மேற்கூரை மர உத்திரங்கள் அமைக்கப்பெற்று அதன் மீது கண்டி ஓடுகள் பாவப்பெற்று விளங்கியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அத்தகைய கண்டி ஓடுகள் பல அகழாய்வில் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. மேலும் உத்திரங்கள் பெரிய ஆணிகளால் ஒன்றோடொன்று இணைக் கப்பட்டிருந்தன என்பதும், கதவு போன்றவைகள் செப்புக் குமிழ் போன்ற பொருட்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன என்பதும் அங்கு கிடைக்கப் பெற்றுள்ள தொல்பொருட்களால் உணர முடிகிறது. இவ்வரண்மனையின் சில பகுதிகள் கலிங்க நாட்டில் இருந்து கொண்டு வந்த கற்களின் வேலைப்பாட்டாலும் தந்தம் அல்லது எலும்பு ஆகியவைகளால் ஆன கலைப்பொருட் களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்திருக்க வேண்டும் என்பதும் அங்கு கிடைத்துள்ள தொல்பொருட்களால் தெரிய வருகின்றன.

இராசேந்திர சோழனது கங்கைப் படையெடுப்பு வெற்றியின் நினைவாக ஜலஸ்தம்பமாக (நீர்த்தூண்) அமைக்கப்பட்ட 'சோழகங்கம்' என்னும் ஏரியினுடைய மதகின் அருகில் இத்துறையால் 1991-ஆம் ஆண்டு அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.[7] இவ்வக ழாய்வின் மூலம் இராசேந்திர சோழன் காலத்திய மதகு வெளிப் படுத்தப்பட்டது. அம்மதகில் இரு பக்கங்களிலும் அரை வட்ட வடிவில் செங்கற்சுவர்கள் அமைக்கப்பட்டிருப்பதும், இரு சுவர் களுக்கும் இடையில் தரைப்பகுதியில் தொட்டி போன்று கருங் கல்லால் அமைக்கப்பட்டிருப்பதும் அகழாய்வின் மூலம் தெரியவந்தது. சோழ கங்கத்தின் நீர், இத்தொட்டியில் விழுந்து, அதன் பிறகு மதகின் துளை வழியாகச் சென்று வெளியேறும் வகையில் அமைந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பக்கச்சுவர்களில் அரை வட்ட அளவில் ஏன் அமைக்கப்பட்டிருக்கிறது என்று ஆய்ந்தபோது நீரின் வேகம் தடுக்கப்பட்டு, அதன் பிறகு நீர் வெளியேற்றப்படுதல் வேண்டும் என்ற நோக்கத்தில் இது அமைக்கப்பட்டதாகத் தெரிய

வருகிறது. தொட்டி போன்ற பகுதியில் வண்டல் படிந்து விடுவதால் பயிர்களுக்கு வண்டல் மண்ணால் கெடுதல் ஏற்படாமல் பாதுகாக்கப் பட்டது. இதே போன்ற அமைப்புத்தான் பூம்புகாரில் சங்க காலத்தைச் சார்ந்த கட்டடப்பகுதியிலும் காண முடிகிறது. இதனை ஆய்வு செய்த அறிஞர்கள் நீரின் வேகத்தைத் தடுக்கும் பொருட்டுத் தான் அக்காலத்து நீரியல் வல்லுநர்கள் இத்தகைய அமைப்பினை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று கூறியுள்ளார்கள். அத்தகைய ஓர் அமைப்பு பிற்காலச் சோழர் காலத்திலும் காணப்படுவது பண்டைய மரபைத் தொடர்ந்து தமிழர்கள் பயன்படுத்தி வந்திருக் கிறார்கள் என்று தெரிய வருகிறது.

விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், திண்டிவனம் வட்டம், பெருமுக்கல் ஏரியில் காணப்பெறும் பிற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்த தூம்பில் நீர் செல்லும் துளையின் இரு பக்கங்களிலும் செங்கற் சுவர் களுக்குப் பதிலாக கற்றூண்கள் நடப்பட்டிருப்பதையும் மதகுக்கு முன்பாகத் தடுப்புக்கல் ஒன்று இருப்பதையும் துளை அடைப்பான் என்ற குழவி போன்ற ஒரு மூடுகல் நீர் செல்வதைக் கட்டுப்படுத்தும் வகையில் இருந்திருக்க வேண்டும் என்றும் கொடுமுடி சண்முகம் தெரிவித்துள்ளார்.[8] பாண்டி நாட்டில் மதகு மற்றும் குமிழி என்று இரு வகையாகக் கட்டட அமைப்பு ஏரியிலிருந்து நீர் வெளியே செல்வதற்கு அமைக்கப் பெற்றிருந்தன. இங்கும் மதகு மற்றும் குமிழியின் இரு பக்கங்களிலும் கற்றூண்கள் தான் அமைக்கப்பட்டுள்ளன[9] ஆனால் சோழகங்கம் மதகில் இரு பக்கமும் பிறை வடிவில் செங்கற்சுவர் காணப்படுகிறது. இவ்வேரியின் நீர் கொள்ளளவு மிகுதியின் காரணத்தினாலும், வெளி யேறும் நீர் மிகுந்த வேகத்தோடு செல்லும் என்பதாலும் இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கலாம்.

சோழகங்க மதகுக்கு மேல் பகுதியில் மராட்டியர் காலக் கட்டடப்பகுதியும் அதற்கு மேல் பகுதியில் ஆங்கிலேயர் காலக் கட்டடப் பகுதியும் காணப்படுகிறது. ஆதலால் சோழர் கால மதகை மராட்டியர் காலத்திலும், ஆங்கிலேயர் காலத்திலும் சீர்திருத்தியுள்ளார்கள் என்பதும் மற்றும் அதே மதகைத் தொடர்ந்து பிற்காலங்களிலும் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் தெரிய வருகிறது.

அதனையடுத்து அரசியரும் மற்றும் அவரது தோழியரும் குளிக்கும் இடம் என்று கருதப்படும் கல் குளத்திற்கு அருகில் அக்குளத்திற்குத் தண்ணீர் வருகின்ற கால்வாய் எவ்வாறு அமைக்கப் பட்டிருக்கிறது என்று அறிவதற்காக அங்கு அகழாய்வு மேற் கொள்ளப்பட்டது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதில் அக்குளத் திற்கு நீர் வருவதற்காகச் சிறுகால் கிழக்கு, மேற்காக செல்கின்ற வாறு அமைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. அவ்வாய்க்கா லானது இரு புறமும் செம்புறாங்கல் அடுக்கப்பெற்ற சுவர்களைக் கொண்டதாகவும், மேல் பகுதி கருங்கல் துண்டுகளால் மூடப்பட்ட தாகவும் காணப்பட்டது. மேற்காணும் செம்புறாங் கற்களும், கருங் கற்களும் ஒழுங்கற்ற வடிவில் பாவப்பட்டிருந்தன. இக்கால்வாய் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வெளிப்படுத்தப்பட்டது. இது மேலும் கிழக்குத் திசை நோக்கித் தொடர்ந்து செல்லும் என்று ஊகிக்க முடிகிறது. மேலும் இங்கு அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டுப் பார்த்தால் தான் இக்கால்வாயின் முழு நீளத்தையும் அறிந்து கொள்ள இயலும். இதுவும் இராசேந்திர சோழன் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம்.

இம்மாளிகைமேட்டில் வடபகுதியில் குருவாலப்பர் கோயில் என்ற ஊரின் தெற்குப் பகுதியில், தாழ்ந்த நிலப்பகுதி காணப் படுகிறது. இப்பகுதி இராசேந்திரன் காலத்தில் கோட்டையைச் சுற்றியிருந்த அகழிப்பகுதியாக இருந்திருக்கலாம். இவ்வகழியை யொட்டித் தெற்குப் பக்கத்தில் கோட்டைச்சுவர் இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அகழாய்வுக்குழி தோண்டப்பட்டது. அவ்வாறு தோண்டப்பட்டதில் கரடு முரடான செம்புறாங் கற்களால் அமைக்கப்பெற்ற கோட்டைச்சுவர் பகுதி வெளிப்படுத்தப் பட்டது. இச்சுவர் இரு பக்கங்களிலும் செம்புறாங் கற்கள் அடுக்கப் பெற்றும் நடுப்பகுதி செங்கல் துண்டுகள் மற்றும் மண் கொண்டு நிரப்பப்பெற்றுக் காணப்பட்டது.

இராசேந்திரன் காலத்தியக் கோட்டையும், அரண்மனையும் எவ்வளவு தூர அளவிற்குப் பரந்து விரிந்திருக்கும் என்பதை அறிந்து கொள்வதற்காகத் தரமணியில் உள்ள நீர் ஆய்வு நிறுவனத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள விண்கலம் மூலம் எடுக்கப்பெற்ற ஒளிப்படங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவ்வாறு ஆய்வு செய்யப் பட்டதில் இவ்வரண்மனையின் பகுதி சுமார் ஒரு சதுர மைல்

அளவிற்குச் சதுரமாகத் தெரிவது கண்டறியப்பட்டது. இச்சதுரத்தின் ஓரம் கோட்டைச்சுவர்ப் பகுதியாக இருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. ஆதலால் இச்சுவர்ப் பகுதியைத் தொடர்ந்து அகழாய்வு செய்து பார்த்தோமானால் இராசேந்திரன் காலத்துக் கோட்டையின் முழுப் பரப்பையும் (நீள, அகலம்) நாம் அறிந்து கொள்ள இயலும்.

மேற்காணும் கண்டுபிடிப்புக்களால் கங்கைகொண்டசோழபுரம், கோட்டைச்சுவரும் அகழியும் கொண்ட ஒரு பெரும் நகரமாக விளங்கியது என்பதை நாம் தெளிவாக உணர முடிகிறது. அது மட்டுமல்லாமல் இராசேந்திரசோழன் காலத்திய சமயம் சார்ந்த கட்டடப்பகுதிகள், சமயம் சாராக் கட்டடப்பகுதிகள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன என்பது பற்றியும் நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. சமயம் சார்ந்த கட்டடங்கள் கருங்கற்களாலும், சமயம் சாராக் கட்டடங்கள் பெரும்பாலும் செங்கல், செம்புறாங்கல் ஆகியவற்றாலும் கட்டப்பெற்றன என்பதும், மேல் தளம் அமைக்கும் முறை இரு பிரிவு கட்டடங்களிலும் வழக்கிலிருந்தன என்பதும் தெரிய வருகிறது. சமயம் சாரா கட்டடங்களின் மேல் தளம் மரம் மற்றும் கண்டி ஓடுகளால் அமைக்கப்பெற்றன. கட்டடங்களின் உட்பகுதி மற்றும் வெளிப்பகுதி வண்ணம் பூசப்பெற்றுப் பல்வகைக் கல், தந்தம் மற்றும் எலும்புகளினால் ஆன கலை வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பெற்றிருந்தன என்பதும்; மரங்களை ஒன்றோடொன்று சேர்ப்பதற்கு இரும்பு ஆணிகளும், பிடிப்பான்களும் (CLAMPS) மற்றும் நெடுங்கதவு போன்ற பகுதிகளில் செம்புக் குமிழிகள் பயன்படுத்தப்பட்டன என்பதும் உணர முடிகிறது. மேல் தளத்தைத் தாங்குவதற்கு மரத்தூண்களும், தூண்களை நிறுத்துவதற்குக் கருங்கல் பீடங்களும் உபயோகப் படுத்தப்பெற்றிருந்தன. ஒரு மரத்தூண் அழிந்திருந்த தடயம் இவ்வகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் கற்றூண்களும் நிறுத்தப்பெற்றிருந்தன என்பதற்குச் சான்றாகச் சில கற்றூண் பகுதிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தரைப்பகுதி சுண்ணாம்புக் காரை கொண்டு பூசப்பட்டிருந்தாலும், சுவர்ப்பகுதி களிமண் மற்றும் பனைவெல்லச்சாறு கலந்த கலவையாலோ அல்லது பூம்புகாரில் கண்டுபிடிக்கப்பட்ட புத்த விகாரப்பகுதி கட்டப்பட்டுள்ளவாறு தாழை நார் (PANDANUS

SPECIES), மணல் மற்றும் பனை வெல்லச்சாறு கொண்ட கலவை யாலோ[10] கட்டப்பட்டிருக்க வேண்டும். மேலும் சுவரின் வெளிப் பக்கத்திலும், உட்பக்கத்திலும் காரை பூசப்பெற்று அதன் மீது வண்ண ஓவியம் தீட்டப்பெற்றிருக்கலாம் என்றும் அறிய முடிகிறது.

---

1. இராசராசேச்சுரம் பற்றி மேலும் அறிய நடன. காசிநாதன், 'இராசராசேச்சுரம்' என்னும் நூலைப் படிக்கவும்.
2. R. Nagaswamy, The Brahadiswara, Paramakasa Concepts of space-Ancient and Modern P. 306, Abinav publications, New Delhi.
3. Vatsyayana Kapila, Siva Natesa in Dance and form; Discourse on siva, Bombay p. 198.
4. தொல்பொருள் ஆய்வுத்துறையின் முன்னாள் இயக்குநர் திரு. நாகசாமி அவர்களின் வழிகாட்டுதலின்படி முதன் முதலாக (1971-72-ல்) யுனெஸ்கோ நிறுவனம் அனுப்பி வைத்த Hass என்னும் விஞ்ஞானி Magnatometric Survey செய்தார். அவருக்கு உதவி புரிந்தவர் அன்றைய கல்வெட்டாய்வாளர் திரு. கு. தாமோதரன். பிறகு 1980 ல் அன்றைய பதிவு அலுவலர் திரு. அ. அப்துல்மஜீத், அகழாய்வாளர், திரு. கி. ஸ்ரீதரன் ஆகியோரும் கள ஆய்வு செய்தனர்.
5. 1991-ல் நிகழ்ந்த அகழாய்வை திரு. நெடுஞ்செழியன், காப்பாட்சியர்; திரு. செல்வராஜ், தொல்பொருள் அலுவலர்; திரு. அ. இராசேந்திரன், காப்பாட்சியர்; திரு. கௌதம புத்திரன், தொல்பொருள் அலுவலர்; திரு. கே. எஸ். சம்பத், வரலாற்றுக்கு முந்தைய அகழாய்வாளர் ஆகியோர் திரு. கி. ஸ்ரீதரன், பதிவு அலுவலர் மேற்பார்வையில் நடத்தினர்.
6. Natana. Kasinathan, 'The Metropolis of Medieval Cholas' (1992), p. 9.
7. Ibid. p. 11.
8. ஆவணம் இதழ் 3. பக்கங்கள் 96–97.
9. Rajan Gurukkal, Aspects of the system of Irrigation in the Early Pandya State, Studies in History, Volume 2, No. 2, p. 160-161.
10. S. K. Padmanaban, Mud mortar technique in ancient Poompuhar "Seminar on Marine Archaeology", Edited by Natana. Kasinathan. (1992), p. 65.

# வரலாற்றுக்கு முற்பட்ட நாகை காயிதே மில்லத் மாவட்டம்

**கே. எஸ். சம்பத்,** எம். எ.
வரலாற்றுக்கு முந்தைய அகழாய்வாளர்

தொல்லியல் ஆய்வாளர்கள் எழுத்துச் சான்றுகள் இல்லாத காலத்தினை வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்று குறிப்பிடுகின்றனர். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் கொடிய விலங்குகளிடமிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவும், வாழ்வதற்கான உணவுப் பொருட்களைப் பெறுவதற்கும், உலோகத்தின் பயனை உணராத காரணத்தால், இயற்கையாகக் கிடைத்த கற்களைக் கருவிகளாக்கிப் பயன்படுத்தினர். சூழ்நிலைக்கேற்ப, அவர்களது வாழ்விடத்தை இயற்கையான குகைகளிலும், நீர் நிலையினையொட்டிய பகுதிகளிலும் அமைத்துக் கொண்டனர்.

தொல்லியல் வல்லுநர்களால் வரலாற்றுக்கு முற்பட்ட காலம்

1. பழைய கற்காலம்
2. இடைக்கற்காலம்
3. புதிய கற்காலம்

என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று காலங்களிலும் மக்கள் உலோகத்தின் பயனை அறிந்திருந்தனர் என்பதற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கப் பெறவில்லை. இம்மூன்று காலங்களை அடுத்து வருவது பெருங்கற்காலம் ஆகும். இக்காலத்தில் வாழ்ந்த மனிதன் இரும்பின் பயனை அறிந்திருந்ததால் பெருங்கற்காலம், "இரும்புக்காலம்" என்றும் அழைக்கப்படுகின்றது. தமிழ்நாட்டில் பெருங்கற்காலப் பகுதிகளே மிகுதியாகக் கிடைக்கப் பெறுகின்றது. அந்த வகையில் பெருங்கற்காலச் சான்றுகளே இதுவரை நாகைப் பகுதியில் மிகுதியாகக் கிடைத்துள்ளன.

## பழைய கற்காலம்

இக் காலம் சுமார் 1 இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. பழைய கற்கால மனிதன் கற்களைக் கொண்டு கைக்கோடரி, கிழிப்பான், சுரண்டி போன்ற கருவிகளை உருவாக்கி, வேட்டையாடி, குகைகளில் தங்கி வாழ்ந்து வந்தான். அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகள் முரட்டுத் தன்மையுடையது.

தமிழ்நாட்டில் பழைய கற்காலக் கருவிகள் சென்னைக்கு அருகாமையில் கோற்றலை ஆற்றின் படுகைகளில் மிகுதியாகக் கிடைக்கின்றன. இங்கு கிடைக்கின்ற கற்கருவிகள் "குவார்ட்சைட்" என்ற மூலக்கற்களால் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வகைப் பாறை இப்பகுதியில் அமைந்துள்ள மலைகளிலிருந்து ஏராளமாகக் கிடைக்க பெறுகின்றது. தமிழ்நாட்டில் சென்னையைத் தவிரப் பிற மாவட்டங்களில் "குவார்ட்சைட்" வகைப் பாறை அதிகமாகக் கிடைக்கப் பெறாமையால், நம்க்குப் பழைய கற்காலக் கருவிகள் அதிக அளவில் கிடைக்கப் பெறவில்லை. அங்ஙனம், நாகை காயிதே மில்லத் மாவட்டத்திலும் நமக்குப் பழைய கற்காலச் சான்றுகள் இதுகாறும் கிடைக்கப் பெறவில்லை. இம்மாவட்டத்தின் பெரும்பகுதி வண்டல் மண் பூமியாகும். மேலும், மலைகள் ஏதும் காணப்படாமையால் கருவிகள் செய்வதற்கான மூலக்கற்களும் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. இருப்பினும், தஞ்சை மாவட்டத்தில் வங்கானங்குடிக்காடு என்னுமிடத்தில் பழைய கற்கருவிகள் கிடைக்கப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## இடைக் கற்காலம்

இடைக்கற்கால மனிதன் நுண்கற்கருவிகளைச் செய்து, நீர்நிலைகளையொட்டிய பகுதிகளில் வாழ்ந்தனர். நுண்ணிய கற்கருவிகளைப் பயன்படுத்தியதால் இக்காலம் நுண்கற்காலம் (Microlithic Age) என அழைக்கப்படுகின்றது. இக்காலம் சுமார் 10 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இக்காலத்திய மனிதன் பிளிண்ட் (Flint) செர்ட் (Chert) அகேட் (Agate) போன்ற மூலக்கற்களைக் கொண்டு கருவிகளை உருவாக்கினான்.

இதுவரையில் நமக்கு நாகை-காயிதே-மில்லத் மாவட்டத்தில் இடைக்கற்காலப் பகுதிகள் இருப்பது கண்டறியப்படவில்லை.

இடைக்கற்கால மனிதன் பெரும்பாலும் ஆற்றோரங்களிலேயே வாழ்ந்து வந்ததனால் காவேரி ஆற்றுப்படுகையிலும் இக்கால மக்கள் வாழ்ந்திருக்கக்கூடும். இப்பகுதியில் விரிவான ஆய்வு மேற்கொண்டால் இக்காலச் சான்றுகள் கிடைக்க வாய்ப்புண்டு.

## புதிய கற்காலம்

இக்கால மக்கள் கற்கருவிகளை இருபுறமும் வழவழப்பாக்கிப் பயன்படுத்தினர். கற்கருவிகளை வேட்டையாடுவதற்கு மட்டுமன்றி தானியங்களை அறுவடை செய்வதற்கும் பயன்படுத்தி வந்தனர். இக்காலத்தில் டோலிரைட் (Dolerite) மற்றும் பசால்ட் (Basalt) வகை மூலக்கற்களே கருவிகள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டன. தமிழ் நாட்டில் புதிய கற்காலப் பகுதிகள் தர்மபுரி மாவட்டத்திலே அதிக அளவில் கிடைக்கப் பெற்றுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் பூதலூரில் சில வகைப் புதிய கற்காலக் கருவிகளும், வல்லத்தில் குவார்ட்ஸ் என்ற படிக்கல்லிலிருந்து செய்யப்பட்ட சில கருவிகளும் கிடைத்துள்ளன. இது வரையில் நமக்கு நாகை - காயிதே - மில்லத் மாவட்டத்தில் புதிய கற்காலக் கருவிகள் கிடைக்கப் பெற வில்லை.

## பெருங்கற்காலம்

இக்காலத்தில் வாழ்ந்த மனிதன் இறந்தவர்களைப் புதைத்துப் பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்களை அமைத்தான். இப் பெருங்கற்காலச் சின்னங்கள் தொல்லியல் வல்லுநர்களால் பல வகை யாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன;

1. கல்திட்டை
2. கல் பதுக்கை
3. மண்குவை
4. கல்குவை
5. கற்கிடை
6. கல்வரிசை
7. தொப்பிக்கல்

8. குடைக்கல்
9. குடைவரைத் தாழ்வறைகள்
10. தாழிகள்

முதலியனவாகும். இக்கால மக்கள் இரும்பின் பயனை அறிந்திருந்தமையால் பெருங்கற்காலம், "இரும்புகாலம்" என்றும் அழைக்கப்படுகின்றது. அதற்குச் சான்றாகப் பெருங்கற்காலப் பகுதிகளில் இரும்புத் தகடுகளும், இரும்புப் பொருட்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பெருங்கற்காலச் சின்னங்களைப் பற்றிச் சங்க இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் குறிப்புகள் காணப்படுவதால் இக்காலம் சுமார் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக்கொள்ளலாம்.

நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் பல இடங்களில் பெருங்கற்காலப் பானை ஓடுகளும், சவக் குழிகளும் கிடைத்துள்ளன. இம்மாவட்டத்தில் கிடைக்கப் பெற்றுள்ள பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் பெரும்பாலும் தாழி (Urn) வகையைச் சார்ந்ததாகும். ஆனால் கற்கிடை வகை ஈமச்சின்னம் தற்போதைய தஞ்சை மாவட்டம்-கந்தர்வக் கோட்டையில் கிடைத்துள்ளது.

நாகை - காயிதே - மில்லத் மாவட்டத்தில் பெருங்கற்காலச் சான்றுகள் பின்வரும் ஊர்களில் காணப்படுகின்றன.

1. தேரழுந்தூர் (மயிலாடுதுறை வட்டம்)
2. கண்டகை (நன்னிலம் வட்டம்)
3. திட்டச்சேரி (நன்னிலம் வட்டம்)
4. பெருங்கடம்பனூர் (நாகப்பட்டினம் வட்டம்)
5. ஆக்கூர்
6. சிக்கல்
7. கீழ்வேளூர்
8. தில்லையாடி
9. திருமலைராயன்பட்டினம்

10. வாணகிரி

11. மணிக்கிராமம்

12. கீழப்பெரும்பள்ளம்

13. வீரமேட்டிருப்பு.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையைச் சார்ந்த திரு. அ. இராசேந்திரன் கல்வெட்டாய்வாளர் அவர்களால் மயிலாடு துறை வட்டம் கொத்தவநல்லூரில் முதுமக்கள் தாழிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு தாழியில் மனிதனின் சுட்ட எலும்புகளும், கருப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும் மட் கலங்களும் கிடைத்துள்ளன. தாழியின் அடிப்பகுதி முக்கோண வடிவிலான கருங்கல் பீடத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

நாகைப் பகுதியில் கற்கால ஆயுதங்கள் செய்யப் பயன் படுத்தப் பெறும் மூலக்கூற்களான டோலரைட் மற்றும் பசால்ட் ஆகியன கிடைக்கவில்லை. எனவே அக்கால மனிதர்கள் இப்பகுதியில் வாழ்வதற்கு ஏற்ற சூழ்நிலை அமையவில்லை என்ற காரணத்தி னாலும் நமக்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை.

இருப்பினும் இன்றும் இப்பகுதியில் விரிவான ஆய்வு மேற் கொள்ள வேண்டியுள்ளது. பெருங்கற்காலத்திலிருந்தே நமக்குச் சான்றுகள் கிடைக்கின்றன. எனவே, இதுகாறும் கிடைத்த சான்றுகளைக் கொண்டு நாகைப் பகுதியின் வரலாறு சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்பாக பெருங்கற்காலத்திலிருந்தே தொடங்கு கிறது எனக் கொள்வதில் தவறில்லை. காவிரி ஆற்றுப் படுகையில் நுண்கற்காலப் பண்பாடு இருந்ததற்கான எச்சங்கள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. விரிவான ஆய்வினை இவ்வாற்றுப் படுகையில் மேற்கொள்ளும் போது நுண்கற்கால எச்சங்கள் வெளிப் படலாம். அதுவரை இப்பகுதியின் தொன்மை சுமார் 2500 ஆண்டு களுக்கு முன் செல்லுகிறது என்று கொள்ளலாம்.

# தமிழகத்தில் களப்பிரர் ஆட்சியின் தோற்றம்

டாக்டர் ஆ. பத்மாவதி
கல்வெட்டாய்வாளர்

குலமரபு அடிப்படையில் அமைந்த சிறுசிறு கூட்டு வாழ்க்கை முறைகளின் அடிப்படைத் தகர்ந்து நிலப்பரப்பு அடிப்படையைக் கொண்ட ஆட்சி வடக்கில், கி.மு. ஆறாம் நூற்றாண்டு வாக்கில் உருவாகிக் கொண்டிருந்தன. காசி, கோசலம், அங்கம், மகதம் போன்ற இராஜ்ஜியங்கள் பல சிறுசிறு குலமரபுகளை ஒன்றாகச் சேர்த்து உருவாகிக் கொண்டிருந்த காலம்தான் புத்தர் வாழ்ந்த காலமாகும்.

நிலப்பரப்பு அடிப்படையில் அமைந்த வாழ்க்கையில், கூட்டு வாழ்க்கை முறை அழிந்து, தனி உடமையை அடிப்படையாகக் கொண்ட பொருள் உற்பத்திக்கும் கைத்தொழில், வணிகத்திற்கும், தனிமனித அடிப்படையிலான உரிமைகளும், கோட்பாடுகளும் தேவைப்பட்டன. இத்தேவைகளை நிறைவேற்றும்வகையில் சமண, பௌத்த மதங்கள் தோன்றின.

உடமைச் சிந்தனைகளுக்கு எதிரான கோட்பாடுகளைக் கொண்டு சமணமும், பௌத்தமும் தோன்றிய போதிலும் அவை ஒரு போதும் உடமை வர்க்கங்களை மறுக்கவோ எதிர்க்கவோ இல்லை. எனவேதான் உடமை வர்க்கம், குறிப்பாக வணிக வர்க்கம் இம்மதங்களைப் பெருமளவில் ஆதரித்தன என்கிறார் ரொமிலா தாபர்.[1]

புத்தர் வாழ்ந்த காலத்திலேயே அவருடைய பௌத்த மதம் மகத சாம்ராஜ்ஜியத்தில் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று அரச மதமும் ஆகிவிட்டது. பௌத்த மத வளர்ச்சி மகதப் பேரரசின் வளர்ச்சியோடு இணைந்து தவிர்க்க முடியாததாகி விட்டது. கிரேக்க அரசனான மினாண்டரும், சக அரசனான

கனிஷ்கரும், இவர்களைப் போன்ற வீரர்களும் பௌத்தர்களாக மாறியது ஏதோ திடீரென்று நிகழ்ந்த நிகழ்ச்சியல்ல. ஜனடதங்கள் என்று கூறப்பட்ட பல்வேறு மக்கள் கூட்டங்களை ஒன்றாக இணைப்பதிலும், ஆரியர், மிலேச்சர்களிடையே இருந்த வேற்றுமையை அகற்றுவதிலும் பௌத்த மதம் சிறப்பாக பணியாற்றியது என்கிறார் ராகுல் சாங்கிருத்தியாயன்.[2]

சங்ககாலம் என்ற வீரயுகச் சமுதாயத்தின் ஒரு கட்டத்தில் குலங்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களில் போர்களின் வழியே எழுப்பப்பட்ட அரசுகள் தங்களை நிலைப்படுத்திக் கொள்ள முனைந்தபோது சமண பௌத்த மதங்கள் தமிழகத்தில் செல்வாக்குப் பெறத் தொடங்கின.

சேர, சோழ, பாண்டியர் என்ற அரச மரபுகள் நிலப்பரப்பின் அடிப்படையில் தோன்றிய அரச மரபுகளாகும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டு அசோகன் காலக் கிர்நார் கல்வெட்டு, சேர, சோழ பாண்டியர்களைக் குறிப்பிடுவதால் கி.மு. மூன்றுக்கு முன்னரே தமிழகத்தில் நிலப்பரப்பின் அடிப்படையிலான வாழ்க்கை முறை தொடங்கிவிட்டது. அப்போதே சமண பௌத்த மதங்கள் செல்வாக்குப் பெறத் தொடங்கிவிட்டன.

சங்க கால மன்னர்களில் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன், கரிகாலன் ஆகிய மன்னர்கள் பௌத்த மத ஆதரவாளர்களாக இருந்தனர் என சிலப்பதிகாரம் கூறுகிறது.[3] பசுக்கன்றைக் கொன்றதற்காக தன் மகனுக்கு கொலைத் தண்டனை வழங்கி, உயிர்களில் உயர்வு தாழ்வு இல்லை என்ற தத்துவத்தைப் பின் பற்றிய மனுநீதி சோழன் கதை பௌத்தத்தின் கதையாகவே இருத்தல் வேண்டும். புறாவுக்காக தன் சதையை அரிந்து கொடுத்த சிபியும் வடநாட்டு ஜனபதங்களைச் சேர்ந்த அரசர்களுள் ஒருவன்.[4] கரிகாலனின் புகார் நகரமோ வடநாட்டு அமராவதி நகர் போன்று அமைக்கப்பட்டிருந்ததாம்[5] இவ்வாறு வடநாட்டு கலாச்சாரத்தின் தாக்கத்தைத் தமிழ் நாட்டிலும் ஏற்படுத்தி செல்வாக்குப் பெற்றிருந்தது பௌத்தம். இந்த செல்வாக்கு வடநாட்டு ஜனபதங்களைச் சேர்ந்த மனுவையும், சிபியையும் தங்கள் முன்னோர்களாகக் கொண்டாடுமளவுக்குச் சென்றுவிட்டிருந்தன.[6]

காரணம்-புத்தரும், புத்தமதத்தினரும் சடங்குகளையும், பக்தியையும் விடவும் ஞானத்தையும், பகுத்தறிவையுமே முக்கிய மாகக் கருதினர். புத்தர் வாழ்ந்த காலத்திலும், மறைந்த காலத்திலும் பல மேதாவிகளைத் தன் பக்கம் இழுத்தார். மகத சாம்ராஜ்ஜியத்தைச் சேர்ந்த சாரிபுத்தர், மகாகாஸ்யபர் மட்டு மல்ல, தொலைவிலிருந்த உஜ்ஜயின் நகர ராஜபுரோகிதர் மகா காத்யாயனர் போன்ற பிராமண அறிஞர்களும் புத்தரின் சீடரா னார்கள். மகதப் பேரரசர் பிம்பிசாரரும், கோசல அரசர் பிரசேனஜித்தும் இதற்கு விதி விலக்கல்லர்,[7] அவ்வாறிருக்க, நம் சோழ நாட்டு மன்னர்களும் புத்தமதக் கருத்துக்களை ஆதரித்துப் போற்றி, அதன் வழி ஆட்சி செய்ததில் வியப்பேதுமில்லை.

இத்தகைய கலாச்சார பின்னணியில் தமிழ்நாட்டு மன்னர்கள் பௌத்த மதத்தை ஆதரித்து வந்தபோது, பௌத்த மதத்தின் ஆதரவைப் பெற்றிருந்த வணிக வர்க்கமும் இம்மன்னர்களின் ஆதரவைப் பெற்றுவிட்டது. கி.பி. நான்காம் நூற்றாண்டு வரை பௌத்தமும் வணிகமும் அரசர்களின் ஆதரவுடன் செல்வாக்குப் பெற்றிருந்தன.

கி.பி. நான்காம் நூற்றாண்டளவில் வடக்கே குப்தர்கள் அரசு பேரரசாக விளங்கியது. கி பி. 380 முதல் 412 வரை ஆட்சி புரிந்தவன் இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்யன் என்னும் அரசன். இவனுக்கு ராஜகுருவாகத் திகழ்ந்து கல்வி கற்பித்தவர் புகழ்பெற்ற பௌத்தர் வசுபந்து என்பவராவார்.[8] ஆனால் இம்மன்னன் காலத்தில்தான் லிங்கபுராணம் தொகுக்கப்பட்டது. லிங்க புராணமோ சமண பௌத்த மதங்களை எதிர்க்கும் தீவரவாத பாசுபத சைவம் பற்றிக் கூறுவதாகும்.

இதே காலகட்டத்தில் கி. பி. நான்காம் நூற்றாண்டில் தமிழகத்தில் சோழ நாட்டில் ஆட்சி புரிந்த மன்னன் கோச்செங்கணான் என்னும் சோழமன்னனாக இருத்தல் வேண்டும் என்பது திரு. மூ. அருணாசலம் அவர்களின் கருத்தாகும்.[9] வரலாறு இலக்கிய ஆதாரங்களும் அக்கருத்தை மெய்ப்பிக் கின்றன. பௌத்த மதச் சார்புடையவனாக வாழ்ந்த கோச்செங் கணான் சிவ வழிபாட்டில் தன் கவனத்தைத் திருப்பினான்.

காரணம் வணிகம் சார்ந்த பொருளாதாரத் தளங்களையும், அதன் பின்னணியில் கலை, இலக்கியம், கல்வி ஆகிய சமூகத்தளங்களையும், வணிகர்கள் வாழும் நகரங்களையும், அதன் நிறுவன அமைப்புக் களான பௌத்த விகாரைகளையும், அரசியல் தளமாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த சோழ அரச பரம்பரைக்கு இதனின்றும் மாறு படக்கூடிய ஒரு வரலாற்றுச் சூழலை காலம் கனியச் செய்திருந்தது.

இச்சூழலில் கிராமப்புறங்களில் மக்கள் விவசாய வளர்ச்சியில் பின் தங்கியிருந்ததால் அவர்களது பொருளாதாரமும் பின்தங்கி யிருந்தது. சிறு தொழிலாளர்களாகிய கைவினைஞர்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தனர். சமூக பொருளாதார வளர்ச்சியில் பலம் குன்றியிருந்த நில்வுடைமை வர்க்கம், விழித்தெழ ஆரம்பித்தது. தங்கள் வர்க்கங்களின் நலனையும் விவசாயத்தையும் பிரதானமாகக் கொண்ட அரசையே நில்வுடைமையாளர்கள் விரும்பினர். வேதங் களும் ஆகமங்களும் கூறுகிற சிவபெருமானுக்கும், திருமாலுக்கும் கோயில்கள் எடுக்குமளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தது நிலவுடமை வர்க்கம். அதன் ஆதரவில்தான் கோச்செங்கணான் சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் 78 கோயில்களைக் கட்டியிருத்தல் வேண்டும். பௌத்த சமயத்தையே செங்கணான் முதலில் சார்ந்திருக்க வேண்டும் என்பதற்கும், பின்னர் சைவனாக மாறினான் என்பதற்கும் பல சான்றுகளைக் கூறலாம்.[10]

இந்த காலகட்டத்தில் உடமைவர்க்கமாகிய பௌத்தம் சார்ந்த வணிகம் தங்கள் வர்க்க நலனுக்கு ஆபத்து வரும் சூழ்நிலை யில் தங்கள் நலனை பாதுகாக்கும் ஒரு அரசையே விரும்பும். அந்த விருப்பம்தான் பௌத்தமத ஆதரவாளர்களாகிய களப்பிர மன்னர்களின் வருகையாகும். சோழ நாட்டில் சோழ மன்னன் கோச்செங்கணான் ஆட்சி பீடத்திலிருந்து அகற்றப்பட்டான் களப்பிரன் அச்சுதவிக்கந்தன் களப்பிரர் ஆட்சியை நிறுவினான்.

அச்சுதக் களப்பாளனை முதல் மன்னனாகக் கொண்டு தொடங்கிய இந்த களப்பிரர் ஆட்சி, சுமார் 200 வருட காலம் நீடித்தது. இக்கால கட்டத்தில் பௌத்தம் சோழ நாட்டில் வலுப் பெற்றது களப்பிரர் வருகைக்கு முன்னர் வரை பௌத்தம் தன் மதக்கருத்துக்களினாலும், நடைமுறைகளினாலும் மக்களையும்,

அரசர்களையும் கவர்ந்திருந்ததேயொழிய, ஆதிக்கம் செலுத்தும் நிறுவனமாகச் செயல்படவில்லை.

ஆனால் களப்பிரர் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்றியதும் பௌத்தம் அரசியல் ரீதியாகவும் செயல்பட ஆரம்பித்தது. அச்சுதவிக்கந்தன் காலத்தில் பூதமங்கலத்தில் வேணுதாசர் என்பவராலும் பூம்புகாரில் கணதாசர் என்பவராலும் விகாரைகள் கட்டப்பட்டன.

மலைகளில் உள்ள குகைகளில் பௌத்தப் பள்ளிகள் இருந்த செய்திகளையும் கடற்கரைப் பட்டினங்களில் கடல் கடந்து வணிகம் செய்யும் வணிகர்களும், அறிவு ஜீவிகளும் வாழ்ந்திருந்த செய்தியையும் அறிந்திருக்கிறோம். ஆனால் ஊர் நடுவே விகாரைகள் அமைத்துக் கொண்டு பௌத்த பிட்சுக்கள் இக்காலம் முதல் கொண்டே வாழ்ந்திருந்திருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது புகாரில் விகாரை கட்டிய கணதாசரும், அதில் தங்கி பல நூல்கள் படைத்த புத்ததத்தரும் அச்சுதவிக்கந்தனின் அமைச்சர்கள் எனக் கூறப்படுகின்றனர்.

கற்றறிந்த சான்றோர்களை அமைச்சர்களாகக் கொண்டிருந்த நிர்வாக யந்திரம், அத்திகோசத்தார், உள்மனையார் போன்ற பூலாங்குறிச்சிக் கல்வெட்டும் கல்லாடமும் கூறுகின்ற நான்கு வித படைகள், உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தினால் பெற்ற வருவாய் ஆகியவற்றைப் பெற்றிருந்தது களப்பிரர் அரசு. இக்கால கட்டத்தில் வடக்கே சந்திரகுப்தனையும், ஹர்சவர்த்தனையும், சிறுசிறு அரசுகள் எஜமானர்களாகக் கொண்டு வாழ்ந்தது போல, இங்கு வந்த களப்பிரர்களும் இந்நாட்டு பலதரப்பட்ட உடமையாளர்களையும், தங்கள் மேலாதிக்கத்தினை ஏற்கவைக்கும் தத்துவப் போக்கினைக் கொண்டவர்களாக இருந்திருத்தல் வேண்டும். அதனால்தான் இக்காலங்களில் சிற்றரசர், குறுநிலத் தலைவர் பற்றிய எச்சங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் சுயேட்சையாக வாழ்ந்திருக்கவில்லை என்றே ஊகிக்கலாம்.

மேலும் இக்கால கட்டங்களில் சமணம், பௌத்தம் தவிர வேறு எந்த சமயமும் நிறுவனப்படுத்தப்பட்ட அமைப்பாக செயல்படவில்லை. புத்த விகாரைகள், சங்கங்கள், பள்ளிகள் ஆகிய

அமைப்புக்கள் நிறுவனமாக செயல்பட்டதால், ஏனைய சிந்தனைகள் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டிருத்தல் வேண்டும். அக்காலத்திய வைதீக மதமோ மிகப் பிற்போக்கான சிந்தனையையேக் கொண்டிருந்தது. பிற மக்களோ, நம்பிக்கையின் அடிப்படையிலும், நிலப்பாகுபாடுகளின் அடிப்படையிலும். அமைந்த சிறு தெய்வங்களையே வணங்கி வந்தனர். எனவே பௌத்த மானது. தத்துவம், நிறுவனம், கல்வி அறிவு, படை, நிர்வாகம் போன்ற அமைப்புக்களுடன் கூடியதாக தன்னிகரின்றி தமிழகத்தில் செயல்பட்டு வந்தது.

இத்தகைய பின்னணியில்தான் புத்ததத்தர், தர்மபாலர் போன்ற அறிவு ஜீவிகள் சோழ நாட்டில் தங்கள் அறிவாற்றலை நூல்களாக யாத்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு கி.பி. நான்காம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை சோழ நாட்டில் நீடித்த பௌத்த மதம், மஹாயானத் தத்துவக் கருத்துக்களைக் கொண்டிருந்தது.

மஹாயானத்தத்துவக் கருத்துக்கள், புத்தரின் போதனை களையும் தத்துவங்களையும் கொண்டது. இவற்றை அடிப்படை யாகக் கொண்டு பல அறிஞர்கள் மேன்மேலும் பௌத்த சிந்தனைகளை வளர்த்து வந்திருக்கின்றார்கள். இவ்வாறு வளர்த்து வந்த கருத்துக்களில் கிரேக்க அறிஞர் அரிஸ்டாட்டிலின் தாக்கமும், ஜெர்மானிய அறிஞர் ஹெகலின் தாக்கமும் உண்டு என்கிறார் ராகுல் சாங்கிருத்தியாயன்.[11]

சோழ நாட்டில் கி.பி. நான்கு முதல் ஆறு வரை நிலவிய பௌத்தம், நாகார்ஜுனரின் சூனியவாதமும், அஸங்கர், வசுபந்து, திக்நாகர் தர்மகீர்த்தி ஆகியோரின் விஞ்ஞான வாதமும், சிறப்புற்றிருந்த பௌத்தமாகவே இருந்திருத்தல் வேண்டும்.

இவர்கள்,

கடவுளை கடுமையாக மறுக்கிறார்கள்.
மறுபிறப்பையும் செய்வினையையும் நம்புகின்றனர்.
அழிவுடமைத் தத்துவத்தை மிகப்
பிரதானமாகக் கொண்டிருந்தனர்.
ஆன்ம வாதத்தை மறுக்கின்றார்கள்.

''அழிவுடைமைத் தத்துவம்'' என்பது - அழிவு, உற்பத்தி என்னும் எதிர்மறைகள் சங்கிலித் தொடராக உடலில் வாழ்க்கைப் பிரவாகம் நிகழ்ந்து கொண்டிருப்பது போல, ஒரு உடலிலிருந்து மற்றொரு உடலுக்கு மறுபிறப்புத் தொடர்கிறது என்கிறார் புத்தர். இதற்கு அவர் ''பிரத்யய் ஸமுத்பாதம்'' எனப் பெயர் இட்டார்.

ஒவ்வொன்றுக்கும் ஒரு காரணம் உண்டு. ஒன்று அழிந்து போன பிறகு மற்றொன்று பிறக்கிறது. ஒரு பொருளோ நிகழ்ச்சியோ தோன்றுவதற்கு முந்தைய வினாடி எப்பொழுதுமே மறைந்து கொண்டே இருக்கும் என்கிறார் புத்தர். இதனை அடிப் படையாகக் கொண்டுதான் புகழ்பெற்ற நாகார்ஜுனர் தனது சூனிய வாதத்தை எடுத்துரைத்தார்.

ஆன்ம வாதத்தை எதிர்க்கும் பௌத்தர்கள், லோகாயாத வாதத்தை ஏற்கவும் மறுக்கிறார்கள். அஸங்கர் என்னும் பேரரறிஞர் விஞ்ஞான வாதத்தை எடுத்துரைத்தார். 'எல்லாம் அழிபவையே' என்னும் பௌத்தர்களின் தத்துவமும், கிரேக்க அறிஞர் பிளாட்டோ வின் 'விஞ்ஞான வாதமும்' கலந்ததுதான் பௌத்தர்களின் விஞ்ஞான வாதமாகும். இவரைப் போலவே திக்நாகரும், தர்ம கீர்த்தியும் விஞ்ஞான வாதிகளாவர்.[12]

இக்கால கட்டத்தில் தத்துவம், வணிகம், அரசியல், சிற்பக்கலை, நாட்டியக்கலை ஆகியவற்றிலும் கிரேக்கர்கள் இந்தியர்களை விடவும் முன்னேறியிருந்தனர். இந்திய கிரேக்க கலைகளின் சங்கமம் தான் காந்தாரக் கலையாகும். பௌத்தர்களின் கல்வியில், சிற்பக்கலைக் கல்வியும் முக்கியப் பங்கு வகித்தது. கி.பி. நான்கு முதல் ஆறு வரை இந்திய தத்துவ இயல், இலக்கியம், இலக்கணம், இசை, நாட்டியம், ஜோதிடம், சித்திரக்கலை, சிற்பக்கலை, கட்டடக் கலை ஆகியவை வளர்ச்சியில் உயர்ந்த நிலையில் இருந்த காலமாகும். இக்காலகட்டம்தான் சோழ நாட்டில் பௌத்தம் ஆட்சி செய்த காலமாகும். மேற்கூறிய தத்துவச் சிந்தனைகளையும், கலை நயங்களையும், அறிவியலையும், நடைமுறைகளையும் வளர்க்கும் தொட்டில்களாகச் சோழ நாட்டு நாகையும், புகாரும், பூதமங்கலமும், உறையூரும், மயூரபட்டினமும் இன்னும் பிற ஊர்களும்

பங்குபெற்றிருந்தன. அவற்றின் பாரம்பர்ய பெருமைகளைத் தன்னகத்தேக் கொண்டு அடுத்தகட்ட கலாச்சார வளர்ச்சிக்கு வரலாற்றை இட்டுச்சென்றன.

---

1. Romila Thapar — Ancient Indian Social History - some interpretations P. 28 New Delhi - 1979
2. ராகுல சாங்கிருத்தியாய்ன் - பௌத்த தத்துவ் இயல் சென்னை-1985
3. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் : வாழ்த்துக் காதை அம்மானை வரி–16
4. Romila Thapar - Op. cit., P. 165 & 197
5. இளங்கோவடிகள் - சிலப்பதிகாரம் : கடலாடு காதை 14-17
6. a) Romila Thaper - Op. cit., P. 165

   b) Sibi Jataka in the panel of Nagarjunakonda belongs to 3rd century A.D.

   This panel illustrates the story of the Bodhi sattvas life as king sibi who was born for his compassion and redeemed a pigion by giving his own flesh.
7. ராகுல சாங்கிருத்தியாயன் - பௌத்த தத்துவ இயல் சென்னை - 1985
8. Ibid., P. 76
9. M. Arunachalam - The Kalabhras in the Pandian country and their impact on the life and letters there P. 52 Madras-1979
10. அ) களவழி நாற்பது என்னும் நூலில் சிறப்பித்துக் கூறப் பட்டிருக்கும் சோழ மன்னன்; செங்கணான் எனக் கூறப் படுகிறது.

ஆ) நாயன்மார்கள் வரலாற்றில் செங்கணான் வரலாறு மட்டும் மறுபிறவித் தொடர்புடையதாக உள்ளது. இது பௌத்தர்களின் இப்பிறவியில் செய்த பலன் மறு பிறவியில் தொடரும் என்ற நம்பிக்கையின் ஆதாரமாக உள்ளது. சிலந்தியாகப் பிறந்த ஒரு உயிரும் தன் நல்வினைப் பயனால் மானிடப் பிறவியாக அதிலும் அரசனாகப் பிறவி எடுக்க முடியும் என்ற பௌத்த மதக்கருத்தினை உள்ளடக்கியதாக உள்ளது.

இ) திருவரங்கம், பௌத்த மதம் நிலவியிருந்த பகுதி யாகும். சிலப்பதிகாரம் நாடுகாண் காதையில் இச்செய்தி கூறப்பட்டுள்ளது.

பௌத்த நூலான ஹம்ச ஜாதகத்தில் புத்தர் அன்னப் பறவையாகப் பிறந்து அரசனுக்கும் மக்களுக்கும் அறநெறி உரைத்தார் என்று கூறுகிறது. திருமங்கை ஆழ்வார் தம் பாசுரங்களில்,

'அன்னமாகி அருமறைகள்
அருளிச் செய்த அமலன்' (5-ம் பத்து)
'அன்னமாய் அன்று அங்கருமறை பயந்தான்
அரங்கமா நகர் அமர்ந்தானே' (Ibid)
'அன்னமதாயிருந்து அங்கற நூலுரைத்த
அது நம்மையாளும் அரசே' (11-ம் பத்து)
'அன்னமாய் முனிவரோடு அமரரேத்த
அருமறையை வெளிப்படுத்த அம்மான் தன்னை'
(திருநெடுந்தாண்டகம் : 30)

11. ராகுல சாங்கிருத்தியாயன்

12. மேலது. ப. 77

# நாகையும் பௌத்தமும்

**தே. கோபாலன்** எம்.ஏ.,
தொல்லியல் அலுவலர்

கி மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டு வரை நாகைப் பகுதி ஒரு தலைசிறந்த பௌத்த மையமாக விளங்கியுள்ளது. வட இந்தியாவில் நாளந்தாவைப் போலவும் தென் இந்தியாவில் காஞ்சிபுரத்தை போலவும் புத்த மதக் கொள்கைகளைப் பரப்புவதில் நாகையும் முதன்மை பெற்று விளங்கியுள்ளது. மௌரியப் பேரரசன் அசோகனின் கல்வெட்டுகள் தென் இந்தியாவில் புத்த மதம் பரவியிருந்ததனை உறுதிப்படுத்துகின்றன. சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்ததாகக் கூறப்படும் இந்திரவிகாரை மகேந்திர தேரரால் கட்டப்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். தாலமி நாகை புத்தமத மையமாக ஐரோப்பியர் வருகைக்கு வெகு காலத்திற்கு முன்பே இருந்ததனைக் குறிப்பிடுகிறார். பாலி இலக்கியங்கள் தென் இந்தியாவில் புத்தமத மையங்களாக காஞ்சிபுரம், உறையூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஊர்களைக் குறிப்பிடுகின்றன "நற்றவர்க்கு இடைமாகின்றது நாகையே" என பௌத்தர்கள் இந்நகரைப் புகழ்ந்து பாடியுள்ளனர். பல்லவர் மற்றும் சோழர் காலத்தில் இம்மதம் இப்பகுதியில் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்ந்தது. நாகப்பட்டினம் ஒரு தலை சிறந்த வணிகத் தலமாகவும் விளங்கியிருந்த காரணத்தினால் புத்த மதத்தைத் தழுவியிருந்த கீழ்த்திசை நாடுகளுடன் வணிகத் தொடர்பு ஏற்பட்டு இம்மதம் வளர்வதற்கு வலிமை கூடியது. கி பி. 14-ஆம் நூற்றாண்டில் நாகப்பட்டினத்தில் இருந்த பௌத்தப் பள்ளியில் சீனர்கள் ஒரு கல்வெட்டு எழுதி வைத்தார்கள் என தாலோ-இ-சிலியோ என்ற சீன நூல் கூறுகிறது.

**நாகைப் பகுதியில் பௌத்தப் பள்ளிகள்**

மௌரியப் பேரரசன் அசோகன் எழுப்பித்த பதாதிட்ட விகாரை இங்கு இருந்ததாகக் கூறப்படுகிறது கி பி. 720-இல்

பல்லவ மன்னன் இராசசிம்மன் காலத்தில் சீன அரசனின் வேண்டுகோளின்படி பௌத்த விகாரம் ஒன்று எழுப்பப்பட்டது. இது சீனா கோயில் என்றும் வழங்கப்பட்டது. இதுவே தற்போது (Jesuit College) வேதக் கல்லூரியாகத் திகழும் கட்டடமாக இருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மேலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் எழுப்பிக்கப்பட்ட இரு புத்த விகாரங்களிலிருந்தும் இச்சீனக் கோயில் முற்றிலும் மாறுபட்டதாக விளங்கியுள்ளது.

மாமன்னன் முதலாம் இராசராசச் சோழன் காலத்தில் நாகப்பட்டினத்தில் ''ஸ்ரீ சைலேந்திர சூடாமணி விகாரை'' என்னும் பௌத்தப் பள்ளி ஒன்று எடுப்பிக்கப்பட்டதனை பெரிய லெய்டன் செப்பேடு தெரிவிக்கிறது. இப்பள்ளி ஸ்ரீ விசையம் மற்றும் கடாரம் ஆகிய இராஜ்யங்களை ஆண்ட ஸ்ரீ மாற விஜயதுங்கன் எனும் அரசனின் வேண்டுகோளின்படி அவனது தந்தையான சூடாமணி என்பவனின் பெயரால் எடுப்பிக்கப்பட்டதாக செப்பேடு கூறுகின்றது, இப்பள்ளிக்கு ''இராசராசன் பெரும் பள்ளி'' என்ற பெயரும் வழங்கப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு இராசராசன் சத்திரிய சிம்ம வளநாட்டுப் பட்டணக் கூற்றத்து ஆனைமங்கலம் என்ற ஊரைக் கொடையாக அளித்ததனையும் செப்பேடு கூறுகின்றது. இப்பள்ளிக்கு அருகிலேயே மற்றொரு விகாரை எழுப்பி அதற்கு ''இராசேந்திரப் பெரும் பள்ளி'' என்ற பெயரைக் கடாரத்தரசன் சூட்டினான் என்பது செப்பேட்டின் மூலம் அறியமுடிகிறது. இராசராசனின் கொடையினை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் முதலாம் குலோத்துங்க சோழன் சின்ன லெய்டன் செப்பேட்டினை வெளியிட்டான். சூடாமணி விகாரம் நாகையில் கி.பி. 1897 வரை இருந்துள்ளது.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் நாகப்பட்டிணத்தில் பௌத்தப் பள்ளியொன்று இருந்ததாக தாலோ-இ-சிலியோ எனும் சீன நூல் கூறுகிறது.

கி.பி. 15-ஆம் நூற்றாண்டு பர்மா தேசத்துக் கல்யாணி கல்வெட்டு பத்ரிகாராமம் எனும் பௌத்தப் பள்ளி நாகப்பட்டினத்தில் இருந்ததாகக் குறிப்பிடுகிறது. ஹம்சபதி தேசத்தை ஆண்ட ராமபதிராசன் அனுப்பிய பௌத்த பிட்சுகளும், சித்ரதூதன்

எனும் தூதனும் இலங்கைக்குச் சென்றுவிட்டுக் கப்பலில் தம் நாடு திரும்பும் பொழுது கப்பல் புயலில் அகப்பட்டுப் போகவே தப்பித்து நாகப்பட்டினக் கடற்கரையை அடைந்து பிழைத்தார்கள் என்றும் இங்கிருந்த பத்ரிகாராமம் பள்ளியில் தங்கி அதற்கருகில் இருந்த சீன தேசக் குகை வடிவமாகக் கட்டப்பட்டிருந்த பள்ளியில் புத்த தேவரை வணங்கினார்கள் என்றும் இக்கல்வெட்டு கூறுகின்றது.

நாகப்பட்டினத்துக்கு வடக்கே ஒன்று அல்லது இரண்டு கல் தொலைவில் 'புதுவெளிக் கோபுரம்' என்றும் 'கருப்புக் கோயில்' என்றும் பெயருள்ள ஒரு கோபுரம் இருந்ததாகவும் இக்கோபுரம் நாகப்பட்டினத்தில் ஓர் அடையாளமாகக் கடலில் தோன்றியது என்றும் அதனைத் தாம் 1867-இல் நேரில் கண்டதாகவும் சர் வால்டர் எலியட் எழுதியுள்ளார். இவ்விடத்தில் கிறிஸ்துவ ஆலயம் அமைப்பதற்காகத் தோண்டிய பொழுது ஐந்து புத்த சிற்பங்கள் கிடைத்துள்ளன. இச்சிற்பங்களில் ஒன்றினைத்தான் அப்போதைய கவர்னர் நேப்பியர் பிரபுவிற்குப் பாதிரிமார்கள் பரிசளித்துள்ளனர்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் மார்க்கோபோலோ சீனாவுக்குச் செல்லும் வழியில் நாகப்பட்டினம் வந்து தங்கியிருந்தபோது தான் கண்ட கிழக்கு ஸ்தூபியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் இந்த ஸ்தூபி செங்கல் மற்றும் மண் கொண்டு பல அடி உயரத்தில் எழுப்பப்பட்டுள்ளது என்றும், அந்த ஸ்தூபியில் ஒரு சீன கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்ததையும் குறிப்பிட்டுள்ளார். இக்கல்வெட்டு இந்த ஸ்தூபி கி.பி. 1267 - (8th Moon of the third year hien chw'en …………)-இல் கட்டி முடிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றது.

நாகப்பட்டினத்தில் தற்போதுள்ள புத்த கோட்டம் எனும் பெயரிலுள்ள அக்ரஹாரம் அக்காலத்தில் பௌத்தக் கோயில் ஒன்று இருந்த இடமாக இருந்திருக்க வேண்டுமென்றும் பின்பு அது சிதைந்து அக்ரஹாரம் தோன்றி இருக்க வேண்டுமென்றும் டாக்டர். கிருஷ்ணசாமி ஐயங்கார் அவர்கள் தம் நூலில் எழுதியிருக்கிறார்.

காவிரிப்பூம்பட்டினத்தில் கணதாசன் என்பவரால் எடுப்பிக்கப்பட்ட பௌத்தப் பள்ளியொன்று இருந்ததாக புத்ததத்தர் தனது

அபிதம்மாவதாரம்' நூலில் குறிப்பிட்டுள்ளார். இப்பள்ளியில், தங்கிக் கொண்டுதான் இந்நூலினைத் தாம் எழுதி முடித்ததாக நூலாசிரியர் கூறுகிறார்.

### பௌத்த தலங்கள்

**பூதமங்கலம் :** மன்னார்குடிக்கு அருகே இரண்டு ஊர்கள் பூதமங்கலம் என்ற பெயரில் உள்ளன. ஒன்று இஸ்லாமிய குடியிருப்புகள் காணப்படும் பகுதியாகும். மற்றொன்று மன்னார் குடியிலிருந்து 6 மைல் தொலைவில் காவிரி ஆற்றின் கிளை நதியான வெண்ணாற்றங்கரையில் பள்ளிவிருத்தி எனும் கிராமத்திற்கு அருகே அமைந்துள்ளது. இது வெண்ணிக்கூற்றத்து வெண்ணி நகரைச் சேர்ந்த பூதமங்கலமாகும். இது 'பள்ளி விருத்தி பூதமங்கலம்' என்றே அழைக்கப்படுகிறது. இவ்வூர் பௌத்தப் பள்ளிக்கு உரிய ஊராக இருக்கலாம். மேலும் 'வினயவினிச்சயம்' எனும் பௌத்த நூல் குறிப்பிடும் பூதமங்கலம் இப்பள்ளிவிருத்தி பூதமங்கலமாகவே இருக்கலாம். இவ்வூரில் காணப்படும் இரண்டு மண் மேடுகளை அகழாய்வு செய்தால் பல புத்த மதச் சான்றுகள் கிட்டலாம்.

திருவிராமேச்சுரம் எனும் பாடல் பெற்ற கோயிலில் உள்ள சாசனம் 'தென்மலிநாட்டு மேற் பூதமங்கலம்' என்றும் அங்கிருந்த கோயிலை 'ஊர்க்காட்டுப் பகவதேவர்' என்றும் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து பூதமங்கலம் மேற்பூதமங்கலம் கீழ்ப்பூதமங்கலம் என இரு கூறாகப் பிரிக்கப்பட்டிருந்த செய்தி தெரிகிறது 'பகவதேவர் கோயில்' புத்தருக்கு உரியதாக இருக்கலாம். புத்தருக்குப் பகவன் என்ற பெயருமுண்டு.

**காவிரிப்பூம்பட்டினம் :** காவிரிப்பூம்பட்டினம் தொன்று தொட்டு பௌத்தர் செல்வாக்குப் பெற்றிருந்த தலமாகத் திகழ்ந்துள்ளது. பாலி மொழியில் எழுதப் பெற்ற பௌத்த நூல்கள் இவ்வூரினைக் கவீரப்பட்டினம்' எனக் குறிப்பிடுகின்றது. 'அகத்தி' அல்லது 'அகித்தி' என்ற பௌத்த முனிவர் இங்கு தங்கியிருந்தார் என புத்த ஜாதகக் கதையொன்று தெரிவிக்கின்றது. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் மகேந்திர தேரர் இலங்கை செல்லும் வழியில் காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கி அங்கு ஏழு புத்த விகாரைகளைக் கட்டினாரென்றும், மணிமேகலை மற்றும் சிலப்பதிகாரம் நூல்களில்

குறிப்பிடும் இந்திர விகாரை என்பவை இவர் கட்டியவைகளே யென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இந்த விகாரைகளின் தலைவராக அறவண அடிகள் என்னும் தேரர் இருந்தார் எனத் தெரிகின்றது. 'உவவனம்' என்ற பூஞ்சோலையின் நடுவில் பளிங்கினால் அமைக்கப்பட்ட சிறு கோயிலில் இருந்த புத்தரது பாத பீடிகையை பௌத்தர்கள் வணங்கி வந்தனர்.

காவிரிப்பூம்பட்டினத்தின் முதுகாட்டினை அடுத்து பௌத்தரால் போற்றப்பட்ட 'சக்கரவாளக் கோட்டம்' இருந்தது என்றும் இங்கு 'சம்பாபதி' எனும் பௌத்த தெய்வம் கோயில் கொண்டிருந்தது என்றும் மணிமேகலை கூறுகிறது. பாலி மொழியில் எழுதப்பட்ட 'இரசவாகினி' எனும் பௌத்த நூலில் சோழ அரசன் ஒருவன் காவிரிப்பூம்பட்டினத்தில் சிவபெருமானுக்குக் கோயில் ஒன்று நிறுவினான் என்றும், அக்கோயிற் பணி நடைபெறும் போது சில பௌத்தத் துறவிகள் வந்து அதிசயங்கள் சிலவற்றைச் செய்து காட்டியதால் அரசன் அச்சிவன் கோயிலை பௌத்த கோயிலாக்கினான் என்று கூறுகின்றது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் புத்த தத்ததேரர் தனது அபிதம்மாவதாரம் என்ற நூலில் காவிரிப்பூம் பட்டினத்தின் அழகையும் அவர் தங்கியிருந்த புத்த பள்ளியைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

**புத்த மங்கலம் :** பேராவூர் ஆதித்தியேசுவரர் கோயிலில் உள்ள ஒரு சாசனம் "செயமாணிக்க வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துப் புத்தமங்கலம்" எனக் குறிப்பிடுகிறது. இவ்வூரின் பெயரே இது ஒரு பௌத்தத் தலம் எனத் தெளிவாகச் சுட்டுகின்றது. நன்னிலம் வட்டத்தில் திருப்பயத்தங்குடியிலுள்ள திருப்பயற்று நாதர் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள மூன்றாம் இராசராச சோழனின் கல்வெட்டில் "இவை புத்தமங்கலமுடையான்.....: எழுத்து" என வருகின்றது. இக்கல்வெட்டு கூறும் அதிகாரி இவ்வூரினைச் சார்ந்தவனாக இருக்கலாம்.

**போதிமங்கலம் :** திருவிடைக்கழி எனும் ஊரிலுள்ள சுப்பிரமணியசுவாமி கோயில் சாசனம் ஒன்று இவ்வூரைக் குறிப்பிடுகின்றது. 'சாக்கியர் தம் போதி மங்கை' எனக் கூறப்படுவது இவ்வூராக இருக்கலாம். போதி மங்கலம் என்ற பெயரே இது

பௌத்தர்களுடைய ஊர் என்பதைத் தெரிவிக்கின்றது. திருஞான சம்பந்தர் பௌத்தர்களுடன் இவ்வூரில் சமயவாதம் செய்ததாகப் பெரியபுராணம் கூறுகின்றது.

**புத்தகுடி :** முதலாம் குலோத்துங்க சோழனது சிறிய லெய்டன் செப்பேடு 'செயங்கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் நாட்டு புத்தகுடி'' என்று குறிப்பிடுகின்றது. சோழநாட்டில் நாகப்பட்டினத்திற்கு அருகில் இருந்த ஊர் ஆகும். இவ்வூரின் பெயர் பௌத்தர்களின் குடியிருப்பு இங்கு இருந்ததனை நமக்கு உணர்த்துகின்றது.

**சங்கமங்கலம் :** ஜயசிம்ம குலகால வளநாட்டுத் தானவ நாட்டுச் சோழசிகாமணிபுரத்துச் சண்டியூரின் மேற்குப் பகுதியில் சங்கமங்கலம் என்னும் ஊர் இருந்ததாக ஒரு சாசனம் கூறுகிறது சங்கம் என்பது பௌத்த பிக்குகளின் சங்கமாகும்.

**புத்தகளூர் :** நன்னிலம் வட்டத்தில் புத்தகளூரில் இடிபாடுற்ற சிவன் கோயிலில் தக்ஷிணாமூர்த்தி கற்சிலையின் பின்புறத்தில் முதலாம் பராந்தகச் சோழனின் 10 ஆவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் இவ்வூர் பாம்பூர் நாட்(டு) பிரம்மதேயம் புத்தகை(ளூர்) எனக் குறிப்பிடப்பட்டு உள்ளது. இவ்வூர் முதலில் பௌத்தத் தலமாக இருந்திருந்ததனால் புத்தகளூர் என வழங்கப்பட்டிருக்க வேண்டும். பின் பராந்தகச் சோழன் காலத்தில் பிரம்மதேயமாக வழங்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டு வாசகம்**

1. ஸ்வஸ்தி ஸ்ரீ
2. கோப்பரகேஸரிவம்மற்க்கு
3. யாண்டு ய ஆவது பாம்பூர் நாட்
4. (டு) பிரம்மதேயம் புத்தகை (சூ)
5. ........ஸ்ரீ கோயில் பரம
6. ஸுந்தர தேவர்க்கு கை.........
7. (இ)ரண்டு மா நிலம் நதொ
8. .........யன் எழுந்தருளு .......
9. ..................... ...........................

### பௌத்த ஆச்சாரியார்கள்

**புத்ததத்தர் :** இவர் அபிதம்மாவதாரம், மதுராத்த விலாசின் (புத்தவம்சம் என்னும் நூலின் உரை) ஆகிய நூல்களை இயற்றியவர். இவர் காவிரிப்பூம்பட்டினத்தில் கணதாசர் என்பவர் கட்டியிருந்த விகாரையில் தங்கியிருந்த போது இந்நூல்களை இயற்றியதாக "அபிதம்மாவதாரம்" நூலில் குறிப்பிடுகிறார். கணதாசரை 'பூஜாவலி' எனும் சிங்கள நூல் 'அமாத்தியர்' (அமைச்சர்) எனக் குறிப்பிடுகிறது. மேலும், புத்ததத்தர் பூத மங்கலத்தில் வேணுதாசன் என்பவர் கட்டியிருந்த விகாரையில் தங்கி யிருந்த போது 'வினயவினிச்சயம்' என்னும் நூலை எழுதியதாகவும் அந்நூலிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

**புத்தநந்தி, சாரிபுத்தர் :** இவர்கள் இருவரும் சோழ நாட்டில் போதிமங்கை எனும் ஊரில் இருந்தவர்களாவர். திருஞானசம்பந்தர் இவ்விருவருடனும் சமயவாதம் செய்து வெற்றி கண்டார் எனப் பெரியபுராணம் கூறுகின்றது. சம்பந்தர் கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவராதலால் இவ்விருவரும் அந்த நூற்றாண்டைச் சார்ந்தவர்களாகவே இருக்கவேண்டும்.

**காசப தேரர் :** இவர் சோழ காசபர் என்றும் வழங்கப் படுகிறார். இவர் தமிழ தேசத்துச் சோழநாட்டவர் என்று 'கந்த வம்சம்' மற்றும் 'சாசனவம்ச தீபம்' எனும் நூல்கள் கூறுகின்றன. இவர் 'மோகவிச்சேதனீ' என்ற நூலை இயற்றியவராவர். காவிரியாறு பாய்கிற சோழநாட்டில் நாக நகரத்தில் (நாகப்பட் டினம்) இருந்த நாகாணன விகாரையில் தங்கியிருந்ததாக இந்நூல் கூறுகின்றது.

**சீன பௌத்த பிக்குகள் :** ஊஹின் (Wu-Hing) மற்றும் ஷீஹங் (She-Hung) எனும் இரு சீன பிக்குகள் நாகப்பட்டினம் வந்துள்ளனர். பின் இங்கிருந்து இலங்கை சென்று புத்த புனிதப் பல்லை தரிசித்துள்ளனர். இவர்கள் யோக முறையினைக் கற்றறிந்த துடன் சில பௌத்த நூல்களைச் சீன மொழியிலும் மொழி பெயர்த் துள்ளனர். மேலும் அவர்கள் மகா போதி மற்றும் நாளந்தாவிற்கும் சென்றுள்ளனர்.

**பௌத்த செப்புத் திருமேனிகள்:** நாகப்பட்டினத்தில் வெலிப் பாளையம் மற்றும் நாணயக்காரத் தெருவில் அகழ்ந்த பொழுது 350 புத்தரின் செப்புத் திருமேனிகள் ஒரு அரிய கலைப் பொக்கிஷ மாக கிடைத்துள்ளது. இச்செப்புத் திருமேனிகள் முற்காலச் சோழர்காலம் முதல் விசயநகரக் காலம் வரை பல்வேறு கால கட்டங்களில் கலைப்பாணியினை வெளிப்படுத்தும் வண்ணம் திகழ்கின்றது. நாகை செப்புத் திருமேனிகளில் உஷ் நீசம் பெரும் பாலும் தீச் சுவாலையாகக் காட்டப்பட்டுள்ளது. தலைமுடி பெரும்பாலும் சுருள் முடியாக இல்லாமல் பொட்டுப் பொட்டாக வடிக்கப்பட்டுள்ளது. நெற்றியில் வர்ணா (திலகம்) குறியீடு காணப்படுகிறது. நாகை புதுவெளிக் கோபுரத்திற்கு அருகில் உள்ள இலுப்பை மரத்துக்கடியில் 5 புத்தரின் செப்புத் திருமேனி களும் கிடைத்துள்ளன. இவ்வைந்தில் ஒன்று குறிப்பிடத்தக்க தாகும். புத்தர் சடபங்கமாக பத்மபீடத்தின் மேல் நின்ற நிலையில் காணப்படுகிறார். வலக்கரம் அபய முத்திரையினையும், இடக்கரம் வரத முத்திரையினையும் காட்டுகின்றது. உஷ் நீசம் தீச் சுவாலை யாகக் காட்டப்பட்டுள்ளது. வஸ்திரம் கழுத்திலிருந்து கணுக்கால் வரை அலை அலையாகக் காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் பீடத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

ஸ்வஸ்தி ஸ்ரீ ஆகம பண்டிதரை உய்யக் கொ

ண்ட நாயகார்

இச்செப்புத் திருமேனிதான் கி.பி. 1868-இல் நாகப்பட்டினத் திற்கு வருகை புரிந்த அப்போதைய சென்னை மாநில கவர்னர் நேப்பியர் பிரபுவுக்கு பரிசாக அளிக்கப்பட்டது.

வெலிப்பாளையத்தில் கிடைத்த புத்தரின் செப்புத் திருமேனி ஒன்று பத்மபீடத்தின் மேல் நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. வலக்கரம் அபய முத்திரையினையும் இடக்கரம் வரத முத்திரையினை யும் காட்டுகின்றது. உஷ் நீசம் தீச் சுவாலையாகக் காட்டப் பட்டுள்ளது. நெற்றியில் ஊர்ணா காணப்படுகிறது. இச்சிற்பத்தின் பீடத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.

''உமையர் திருவாலியாழ்வார் நாயகர்''

இதில் புத்தர் ''நாயகர்'' எனக் குறிப்பிடப்படுகிறார். 'திருவாலி' என்பது ஊரின் பெயராகும். இது திருநகரிக்கு அருகில் உள்ளது. இக்கல்வெட்டு கி.பி 13-14 ஆம் நூற்றாண்டின் எழுத்தமைதியினைக் கொண்டு விளங்குகின்றது

**பௌத்தக் கற்சிற்பங்கள் :** வேதாரண்யம் வட்டத்தில் இடும்பவனம் மற்றும் புஷ்பவனம் ஆகிய இடங்களில் கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டினைச் சார்ந்த புத்தரின் கற்சிற்பங்கள் கிடைத்துள்ளன.

**பெருஞ்சேரி :** மயிலாடுதுறை — திருவாரூர் இரயில்வேயில் உள்ள மங்கைநல்லூர் நிலையத்திற்கு வடக்கே 1 மைல் தூரத்தில் உள்ளது இவ்வூர். இங்கு 5'3'' உயரமுள்ள புத்தரின் உருவச் சிலை அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இச்சிற்பத்தின் பீடத்தில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு சிதைந்து காணப்படுகிறது.

நன்னிலம் வட்டத்தில் கோட்டப்பாடி மற்றும் ஏழையூரில் புத்தரின் கற்சிற்பங்கள் காணப்படுகின்றன. ஏழையூர் புத்தர் தியான புத்தராக வடிக்கப்பட்டுள்ளார். இச்சிற்பத்தின் வடிவமைப்பு காஞ்சிபுரத்திலுள்ள கருக்கீழமர்ந்த அம்மன் சிலையினை ஒத்துள்ளது. அம்பகளத்தூர் ரயிலடிக்கு 3 மைல் தொலைவிலுள்ள கோட்டப்பாடி எனும் கிராமத்தில் சிறிய வடிவினாலான புத்தர் சிற்பமொன்று கிடைத்துள்ளது

**முடிவுரை :** தென் இந்தியாவில் இந்து மத எழுச்சியின் காரணமாக கி.பி. 3-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முடிய பௌத்த மதம் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. வடஇந்தியா விலிருந்து வந்த சமண மற்றும் ஆசீவக மதங்களும் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்குத் தடைக் கற்களாக விளங்கின. இம்மதங்கள் ஒன்றோடொன்று முரண்பட்ட கொள்கைகளையுடையன. சமயப் பூசல்களும் போட்டிகளும் ஏற்பட்டன. மாணிக்க வாசகருக்கும், இலங்கை பௌத்தர்களுக்கும் சிதம்பரத்தில் ஏற்பட்ட மத சர்ச்சை தென் இந்தியாவில் ஒரு திருப்பு முனையினை ஏற்படுத்தியது. இதேபோல் திருஞானசம்பந்தர் தலைச்சேரியில் சாரிபுத்தர் மற்றும் புத்தநந்தி ஆகியோருடன் தீவிர மத சர்ச்சையில் ஈடுபட்டார். தொண்டிரடிப் பொடியாழ்வார் அதிதீவிர புத்த மத எதிர்ப்பாள ராகத் திகழ்ந்தார். இவர் புத்த மதக் கோயில்களை கொள்ளை

யடிக்க போதனை செய்யும் அளவுக்கு சென்றார். இம்மாற்றங்களின் தாக்கம் நாகைப் பகுதியிலும் ஏற்பட்டிருக்க வேண்டும்.

திருமங்கை ஆழ்வார் நாகப்பட்டினத்தில் பௌத்த விகாரையிலிருந்து தங்கத்தினாலான புத்தர் சிலையைத் திருடி, உருக்கி அதனைக்கொண்டு திருவரங்கம் கோயிலின் நான்காம் பிரகாரத்தினையும் பல வைணவ சந்நதிகளையும் கட்டினார் என வைணவ இலக்கியமான குருபரம்பரையின் மூலம் அறிகிறோம்.

"வெள்ளியார், பிண்டியார் போதியார் என்று இவர்
ஓதும் கள்ளநூல்"

எனத் திருமங்கை ஆழ்வார் சைவ, சமண, பௌத்த நூல்களைக் கள்ள நூல்கள், பொய்யானவை எனச் சாடுகின்றார். மேலும் சங்கராச்சாரியாரின் அத்வைதத் தத்துவமும் சங்கர மடங்களின் ஸ்தாபிதமும் காஞ்சியின் காமகோடி பீடம் நிறுவப்பட்டதும் தென்னிந்தியாவில் பௌத்த மதம் வீழ்ச்சி அடைவதற்கு காரணமாயின.

---


1. The Cholas - K. A. Neelakanta Sastri
2. South Indian Studies Vol-II. Buddhism in South India - Dr. C. Minakshi
3. Epigraphia Indica Vol-XXII (Lager & Smaller Leiden Plates)
4. Administration and Social life under the Pallavas Dr. C. Minakshi
5. Ep. Rep 124 of 1935-36
6. Arcg. Surv. Rep. 1912-13 p. 75
7. The Nagapattinnam and other Buddhist Bronzes in the Madras Museum - T. N. Ramachandran
8. பௌத்தமும், தமிழும் — மயிலை, சீனி வேங்கடசாமி
9. நாகப்பட்டினம் ஒரு வரலாற்றுப் பின்னணி-நடன. காசிநாதன் (நவம்பர் 1991 'தமிழரசு நாளிதழில்' வெளியான ஆய்வுக் கட்டுரை)
10. நன்னிலம் கல்வெட்டுக்கள் - இரண்டாம் தொகுதி (தொடர் எண் : 133/1977 மற்றும் 230/1978) - திருமதி ஆ. பத்மாவதி

# குலோத்துங்கன் காலத்தில் பிச்சை எடுத்துக்கட்டிய கோயிலும் அதன் கல்வெட்டுகளும்

**புலவர் செ. போசு,** எம்.ஏ., டிப்.எப்.இ.ஆர்க், டிப்.இன்.ஜர்னலிசம்,
கல்வெட்டாய்வாளர்

கண்ணியத்திற்குரிய நாகை காயிதே மில்லத் மாவட்டத்தில் மன்னார்குடி வட்டத்தில் அண்மையில் புதிய கல்வெட்டு ஒன்று கள ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்டது.[1]

**மூன்றாம் குலோத்துங்கன் :** பிச்சை எடுத்துக் கோயில் கட்டிய போது சோழப்பெருநாட்டை ஆண்டவன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான். இவன் தமது முன்னோரைப் போலவே சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவன். கும்பகோணம் வட்டம் திரிபுவனத்தில் காணப்படும் கல்வெட்டொன்று இவனைத் தில்லைச் சிற்றம்பல வாணருடைய 'ஏகதத்தன்' என்று கூறுகிறது.[2]

புதுக்கோட்டைக்கு அண்மையில் உள்ள குடுமியான்மலையிலும் சேரனூரிலும் காணப்படும் இரண்டு கல்வெட்டுகள் இம்மன்னன் சிவபெருமானது திருக்கோயில்களுக்குச் செய்த திருப்பணிகளை விரிவாகக் கூறுகின்றன.[3]

திரிபுவனை வடமொழிக் கல்வெட்டு இவன் புரிந்துள்ள சிவன்கோயில் திருத்தொண்டுகளை இனிதுணர்த்துகின்றது.[4] அக்கல்வெட்டுகளை ஆராயுமிடத்து இவன், தன் ஆட்சிக்காலத்தில் பெரும்பொருளைச் சிவாலயங்களுக்குத் திருப்பணி செய்வதில் செலவிட்டுள்ளமை நன்கு புலனாகும்.[5]

தில்லையம்பதியில் பேரம்பலம் பொன் வேய்ந்தமை, அம்பல வாணரது திருக்கோயில் மூன்றாம் திருச்சுற்று, சிவகாமியம்மையின் கோபுரம் எடுத்தமை, காஞ்சி, திருவிடைமருதூர், இராசராசபுரம்

ஆகிய இடங்களில் அரும்பணி ஆற்றியமை, திருவாரூரில் சபா மண்டபம், பெரியகோபுரம் கட்டுவித்தமை-ஆகியன இவன் செய்த அறச்செயல்களுள் சிலவாகும்.[6]

இவ்வேந்தனுடைய கல்வெட்டுகள் தென்பாண்டிநாட்டில் திருநெல்வேலியிலும், மதுரை மாவட்டத்தில் உள்ள தேனூரிலும், புதுக்கோட்டை நாட்டில் உள்ள சில ஊர்களிலும்[7] சேலம் மாவட்டத்தில் தடாவூர், தகடூர், ஆறகளூர் முதலான ஊர்களிலும்,[8] கொங்குநாட்டுக்கருவூரிலும்,[9] மைசூர் நாட்டில் ஹேமவதி ஆவனி முதலான ஊர்களிலும்,[10] வடக்கே உள்ள நெல்லூர் மாவட்டத்தில் நெல்லூர், ரெட்டிப்பாளையம், மல்லம் ஆகிய ஊர்களிலும்,[11] கடப்பை மாவட்டத்தில் நத்தலூர், பொத்தப்பி என்ற ஊர்களிலும் இன்றும் உள்ளன.[12]

எனவே தெற்கே உள்ள குமரிமுனை முதல் வடக்கேயுள்ள வேங்கிநாடு வரையில் இவன் ஆட்சிக் காலத்தில் சோழ இராச்சியம் பரவியிருந்தது என்பது ஒரு தலை.[13]

இருப்பிடம் : இரந்து, கட்டிய கோயில் மன்னார்குடி வட்டத்தில் அமைந்துள்ளது. இலட்சுமாங்குடியில் இருந்து 6 கி.மீ. தூரத்தில் பெரியகொத்தூர் என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. இர் இடிபாடுற்ற சிவம் கோயிலொன்று உள்ளது.

இக்கோயில் இன்று மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலென்று ஊர் மக்களால் அழைக்கப்படுகிறது. இடிபாடுற்ற இக்கோயில் கல்வெட்டுகளைச் சுற்றிலும் திரு சீனிக்கோனார் என்பவர் முட்செடிகளையும், பிற மரங்களையும் போட்டுக் கோயில் வெளித்தெரியாவண்ணம் வைத்திருந்தார்.

கள ஆய்வின் போது இவற்றைக் காண நேர்ந்தபோது, இவ்வாக்கிரமிப்பினை அகற்றித் தந்து கல்வெட்டுகளைப் படியெடுத்துதவத் துணை புரியும்படி அவரிடமும், மணக்கரை கிராம நிர்வாக அதிகாரிடமும் கேட்டுக்கொள்ளப்பட்டது.[14]

பின்னர் சில காலத்திற்குப் பின்னர் ஊர்ப் பொதுமக்களின் உதவியோடு முட்செடிகள் அகற்றப்பட்டு அங்கிருந்து கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டன.[15]

( இதன் தொடர்ச்சி அடுத்த இதழில் )

## இரங்கல்

# திருமதி இரா. சத்தியவதி

*1937* - ஆம் ஆண்டு தஞ்சை மாவட்டம் மன்னார் குடியில் பிறந்தார். தந்தை - இராமச்சந்திரன், கணவன் திரு. ஆர். இராமகிருஷ்ணன். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்.

*1963* - ஆம் ஆண்டு (4-2-63) இத்துறைக்கென முதற் பணியாளராக தமிழ் நாடு அரசுத் தேர்வாணையத்தால் தட்டச்சராகப் பணியமர்த்தப்பட்ட இவர் பின்னர் இத் துறையில் உதவியராகவும், கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்று சென்னையிலும், மதுரை திருமலைநாயக்கர் மஹாலிலும் நீண்டகாலமாகச் சிறப் பாகப் பணியாற்றியவர். 32 ஆண்டுகள் பணியாற்றிய இவர் ஓய்வடைவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே (7-6-1995) இயற்கை எய்தியது இத்துறைக்கு இழப்பாகும். அவரது மறைவிற்கு இததுறை அஞ்சலி செலுத்துகிறது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அச்சகத்தில் அச்சிட்டு
இத்துறை இயக்குநர். திரு. நடன. காசிநாதன் அவர்கள் சார்பாக
திரு. மா. சந்திரமூர்த்தி, பதிவு அலுவலரால்
வெளியிடப் பெற்றது.